வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 03 24.08.2022 புதன்கிழமை இதழ் : 260 பக்கங்கள் : 16

# பயங்கரவாத சட்டத்துக்கு பதிலாக தேசிய பாதுகாப்பு சட்டம் வருகிறது!



கொழும்பு, ஓகஸ்ட் 24

**பயங்கரவாத தடுப்பு சட்டத்துக்கு பதிலாக தேசிய பாதுகாப்பு சட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்று அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

இந்தப் புதிய சட்டம் குறித்து அமைச்சரவைக்கு அறிவிக்கப்படடுள்ளதாகவும் அவர் கூறினார்.

தேசிய பாதுகாப்பு சட்டத்தை நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தயாரித்து வருகிறார். இதன் வரைவு விரைவில் அமைச்சரவையின் ஒப்புதலுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடுப்பு சட்டம் 1979ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் உள்ளது. தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை கொடூரமான முறையில் அடக்குவதற்காக இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டது.

இந்நிலையில், அரசாங்கத்துக்கு எதிராக அண்மையில் இடம்பெற்ற

15

## 10 இலட்சம் லீற்றர் ம. எண்ணெய் விநியோகம்!



கொழும்பு, ஓக. 24

சபுகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கடந்த இரண்டு தினங்களில் சுமார் 10 இலட்சம் லீற்றர் மண்ணெண்ணெய் விநியோகத்திற்காக விடுவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் மண்ணெண்ணெய்க்கான கேள்வி அதிகமாக உள்ளது. இந்நிலையில், அதனை விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, 87 ரூபாயாக இருந்த ஒரு லீற்றர் மண்ணெண்ணெய், கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு முதல் 340 ரூபாயாக அதிகரிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கோட்டாபய ராஜபக்ஷ செப். நாடு திரும்புவார்?

கொழும்பு, ஓக. 24

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ செப்ரெம்பர் மாதம் நாடு திரும்புவார் என்று சர்வதேச ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மக்கள் போராட்டம் காரணமாக கடந்த ஜூலை மாதம் அன்றைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறினார். தொடர்ந்து அவர் தனது பதவியையும் இராஜிநாமா செய்தார்.

தற்போது தாய்லாந்தில் தங்கியுள்ள அவர் இந்த

15

## வடக்கில் ஆக்கிரமித்த காணிகளை அந்த மக்களிடமே வழங்கவேண்டும்!

### காணி பிடிப்பால் பாதிக்கப்பட்ட மக்கள்

மன்னார், ஓக. 24

"வட மாகாணத்தில் மக்களின் காணிகளை அரசும் படையினரும் கையகப்படுத்தியுள்ளன. மக்கள் இடம்பெயர்ந்து பல வருடங்களாக வேறு இடங்களில் வாழும் நிலையிலும் அரசாங்கம் மக்களின் காணிகளை அவர்களிடமே மீள கையளிக்க இதுவரை நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை", என்று பாதிக்கப்பட்ட மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மன்னார் சமூக பொருளாதார

15

## இளைஞர்களை அரசு வேட்டையாடுகின்றது

### எதிர்க்கட்சி தலைவர் சாடுகிறார்



கொழும்பு, ஓக. 23

"இந்நாட்டின் இளம் தலைமுறையினர் பெரும் புரட்சியை முன்னெடுத்தனர். அதன் விளைவாகவே நாட்டை அதலபாதாளத்தில் தள்ளிய கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி

15

## 300 வகை பொருட்களுக்கு மீண்டும் இறக்குமதி தடை!

கொழும்பு, ஓக. 24

ஆண், பெண்களுக்கான ஆடை வகைகள், காலணிகள், அழகுசாதன பொருட்கள், மாபிள் உள்ளிட்ட செரமிக் பொருட்கள், சொக்லேட், பழங்கள், கச்சான் வகைககள் உள்ளிட்ட 300இற்கும் மேற்பட்ட பொருட்களுக்கு மீண்டும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி - ஏற்றுமதி

15

## 12 பொருட்களின் விலைகள் குறைப்பு!

கொழும்பு, ஓக. 24

சதோச நிறுவனம் தனது விற்பனை நிலையங்கள் ஊடாக விற்பனை செய்கின்ற பொருட்களில் 12 அத்தியாவசிய பொருட்களின் விலைகளைக் குறைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில்,

பெரிய வெங்காயம் 40 ரூபா

15

## இடைக்கால பட்ஜெட் 29 ஆம் திகதி வரும்!

கொழும்பு, ஓக. 24

இந்த வருடத்தின் அடுத்த சில மாதங்களுக்காக அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கவுள்ள இடைக்கால வரவு-செலவுத் திட்டம் அநேகமாக எதிர்வரும் 29ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படக்கூடும் என அமைச்சரவை பேச்சாளர் அமைச்

15

## காரைக்காலுக்கு படகு சேவை; எனக்கு எதுவுமே தெரியாது!

### கைவிரித்தார் போக்குவரத்து அமைச்சர்

கொழும்பு, ஓக. 24

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து இந்தியாவின் புதுச்சேரி - காரைக்காலுக்கு இடையே பயணிகள் மற்றும் சரக்கு படகு சேவை இந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும் எனக் கூறுப்படுவது குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்தியா - புதுச்சேரி சட்டசபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவு திட்டத்தில் காரைக்கால் துறைமுகத்திலிருந்து காங்கேசன்துறை துறைமுகத்துக்கு பயணிகள் மற்றும் சரக்கு கப்பல்

15

## மன்னாரில் காற்று மின்சாரம் எதிர்த்துப் போராட தீர்மானம்!

மன்னார், ஓக. 24

மன்னாரில் இடம்பெறும் கனிய மணல் அகழ்வு, காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் என்பவற்றுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்த பிரஜைகள் குழு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பின் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

மன்னாரில் இடம்பெறும் மணல் அகழ்வு,

15

## வல்வெட்டித்துறை நகர சபையை மீண்டும் இழந்தது கூட்டமைப்பு!

### தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் இரா. சுரேன் புதிய தலைவராகத் தெரிவு

யாழ்ப்பாணம், ஓக. 24

வல்வெட்டித்துறை நகர சபையின் புதிய தலைவராகத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் இராமச்சந்திரன் சுரேன் தெரிவாகியுள்ளார்.

வல்வெட்டித்துறை நகர சபைக்கான தலைவர் தெரிவு நேற்று நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்படவேண்டும் என்பதே பலரின் விருப்பமாக இருக்கின்றது. ஆனால், அது சர்வகட்சிகளும் உடன்பட்டால் மட்டுமே சாத்தியமாகும்.

பிரதான எதிர்க்கட்சி அதற்கு உடன்படுவதாக இல்லை என்பது தெரிந்ததே.

முன்னர் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது, மே ஒன்பதாம் திகதி அப்போதைய பிரதமராக இருந்த மகிந்த ராஜபக்ஷ பதவி விலகியதும், சஜித் பிரேமதாஸவையே பிரதமர் பதவியை பொறுப்பேற்குமாறு அழைப்பு விடுத்தார். அதனை சஜித் நிராகரித்த பின்னரே அவர் ரணில் விக்கிரமசிங்கவை அந்தப் பதவியில் நியமித்தார்.

அவ்வாறு ரணில் பிரதமராக நியமிக்கப்பட்டதும், நிலைமையைப் புரிந்துகொண்ட சஜித், பிரதமர் பதவியை ஏற்க முன்வந்தபோதிலும் அது காலம் கடந்த கோரிக்கையாகியது.

பின்னர், ரணில் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி பதவிக்காக தேர்தலில் போட்டியிட்டபோது தானும் போட்டியிடப்போகிறார் என்று அறிவித்திருந்த சஜித் கடைசி நேரத்தில், அதுவும் முதல்நாளன்று போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்தார்.

இவையெல்லாம் சஜித்தின் "துணிச்சல்மிக்க" அரசியலுக்கு சான்றுகளாக அமைந்தமை வேறு கதை.

இப்போது, ரணில் நாட்டில் காணப்பட்ட "கியூ" யுகத்தை இல்லாமல் பண்ணியதோடு, ரணிலால் மாத்திரமே இந்த நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்கமுடியும் என்ற நம்பிக்கையை - ஆகக்குறைந்தது நடுத்தர வர்க்கத்தினர் மத்தியிலிருந்தாவது பெற்றுவிட்டார் என்றே சொல்லலாம்.

இப்போது பலரும் எதிர்பார்ப்பது, வெறுமனே பொதுஜன முன்னணி ஆட்சியாக ரணில் அரசு தொடர்வதை விடுத்து சகல கட்சிகளையும் சேர்த்துக்கொண்டு ஒரு சர்வகட்சி அரசாங்கமாக பாராளுமன்றத்தின் எஞ்சிய காலத்தைக் கொண்டுசெல்ல வேண்டும் என்பதே. அதனையே பலரும் இப்போது வலியுறுத்தி வருவதையே காணமுடிகின்றது. ஆனால், சர்வகட்சி அரசு என்றால் அதில் பிரதான எதிர்க்கட்சியான சஜித் பிரேமதாஸவின் ஐக்கிய மக்கள் சக்தியும் இடம்பெறுவது மாத்திரமே சர்வட்சி அரசு என்ற இலக்கை முழுமையாக அடைவதற்கு உதவும்.

ஆனால், சஜித் பிரேமதாஸவோ அவ்வாறு சர்வகட்சி அரசில் இணைந்துகொள்ளும் முடிவில் இல்லை என்பதை திரும்பத் திரும்பக் கூறிவருகின்றார்.

தானும் முடிந்தவரை சஜித் அணியையும் சேர்த்துக் கொண்டு செல்வதற்கே விரும்புவதாக- குறைந்த பட்சம் அவ்வாறு காட்டிக் கொள்வதற்காகவாவது அவருக்கு தொடர்ந்து அழைப்பு விடுத்து வந்தார் ரணில். அதனால்தான் நேற்று முன்தினமும் ரணில் - சஜித் சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது சஜித் ஒரு விடயத்தை தெளிவாகத் தெரிவித்திருப்பதாக அவரின் தரப்பிலிருந்து தெரியவந்தது.

தான் எதிர்க்கட்சி தலைவர் என்ற ஸ்தானத்திலேயே அடுத்த தேர்தலை எதிர்கொள்ளும்வரை இருக்கப் போகிறாரெனவும், அதற்காக அரசாங்கம் செய்கின்ற நல்ல காரியங்களுக்கு ஆதரவு வழங்க தயாராக இருக்கிறார் என்றும் தெரிவித்துள்ள சஜித், அரசாங்கத்தில் இணைந்து கொண்டால் அரசாங்கம் செய்கின்ற தவறுகளை சுட்டிக் காட்ட முடியாத நிலை ஏற்படும் என்றும் தெளிவுபடுத்தியிருக்கிறாராம்.

அரசாங்கத்தில் அதுவும் ஒரு சர்வகட்சி அரசாங்கத்தில் இருந்துகொண்டு, அரசாங்கம் செய்கின்ற தவறுகளை சுட்டிக் காட்ட முடியாது என்ற சஜித்தின் வாதத்தை ஏற்றுக்கொள்ளாத ரணில், நீங்கள் அரசில் இருந்தால், தவறான விடயங்களே நடக்காமல் தடுக்கலாம்தானே என்று அவருக்குக் கூறியபோதிலும் அவர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறப்படுகின்றது.

சர்வகட்சி அரசுக்கு ஆதரவு என்றும் ஆனால், அதில் இடம்பெறப்போவதில்லை, அரசின் நல்ல விடயங்களுக்கு ஆதரவு வழங்குவேன் எனவும் அவர் திரும்பவும் தெரிவித்திருக்கிறார்.

எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு நல்லதை ஆதரிப்பேன் என்றும் தவறானதை எதிர்ப்பேன் எனவும்தான் எந்த எதிர்க்கட்சியும் கூறலாம். எதிர்க்கட்சி என்றால் நல்லதையும் எதிர்க்க வேண்டும் என்பதல்லவே. பின்னர் எதற்காக சர்வகட்சி அரசுக்கு அதரவு என்று அவர் சொல்கின்றார் என்பது அவருக்கு மாத்திரமே வெளிச்சமானது.

சஜித்துடனான அந்தச் சந்திப்பில் ரணில் ஒரு விடயத்தை தெளிவாகத் தெரிவித்து அவரை அனுப்பி வைத்தாராம்.

"நீங்கள் அரசாங்கத்துடன் சேரவில்லை என்றாலும் உங்கள் தரப்பிலிருந்து பலர் அரசாங்கத்தில் சேருவதற்குத் தயாராக இருக்கின்றார்கள். அப்படி சேர விரும்புபவர்களை நான் இணைத்துக்கொண்டால், பிறகு நான்தான் உங்கள் கட்சியை உடைக்கின்றேன் என்று என்மீது குற்றம் சொல்லாதீர்கள்." இதுதான ரணில் சொல்லியனுப்பிய செய்தி.

- ஊர்க்குருவி.



## ஜனாதிபதி ரணிலுடன் நேற்று பொலிஸ் மா அதிபர் சந்திப்பு!

கொழும்பு, ஒக. 24

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பொலிஸ்மா அதிபர் சி. டி. விக்கிரமரத்னவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதியாகவும் முப்படைகளின் தளபதியாக வும் ரணில் விக்கிரமசிங்க பதவி யேற்றதன் பின்னர் மரியாதை நிமித்தம் இந்த சந்திப்பு இடம் பெற்றது.

இதன் போது நினைவு பரிசுகளும் பரிமாறிக் கொள்ளப்பட்டன என்று ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## 22ஆவது திருத்தத்துக்கு எதிரான வழக்கு விசாரணைகள் நிறைவு!

கொழும்பு, ஒக. 24

22ஆவது திருத்தத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட ஒன்பது மனுக்கள் விசாரணையை இலங்கை உயர் நீதிமன்றம் நேற்று நிறைவுறுத்தியது.

இதனையடுத்து உயர்நீதிமன்றின் தீர்ப்பு பாராளுமன்ற சபாநாயகருக்கு அனுப்பப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வினிவிந்த பெரமுனவின் செயலாளர் சட்டத்தரணி நாகநந்த கொடிதுவக்கு உள்ளிட்ட ஒன்பது பேரால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த மனுக்களில் பிரதிவாதியாக சட்டமா அதிபர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

அரசமைப்பின் 22வது திருத்தத்தின் ஊடாக அரசமைப்பின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படுகின்றன என்று மனுக்களில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ஐ)

## மேலதிக எரிபொருள் ஒதுக்கத்தை அறிமுகப்படுத்த அரசு திட்டம்!

கொழும்பு, ஒக. 24

தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திரம் தொடர்பான ஆய்வு கூட்டம் நேற்று காலை இணையவழியாக நடைபெற்றது.

இதில் எரிபொருள் விநியோகம் தொடர்பான சில புதிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. வாகனம் அல்லாத எரிபொருள் தேவைக்கான பதிவுகள், அடுத்த மாதத்தின் முதல் வாரத்தில் ஆரம்பமாகும் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

சுற்றுலா பயணிக்களுக்கான எரிபொருள் அட்டையும் வழங்கப்படுவதாக அமைச்சர் தெரிவித்தார். அத்துடன், அத்தியாவசிய சேவைகளுக்காக விசேட பிரிவுகளின் கீழ் மேலதிக எரிபொருள் ஒதுக்கம் அறிமுகப்படுத் தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், ஒக. 24

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டில் அவர், குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக நடத்தப்படும் வாராந்த சொற்பொழிவும் - மாதந்த நாயன்மார் குருபூஜை நிகழ்வு கனடாவின் றொறன் றோவில் வசிக்கும் சிவஸ்ரீ பால. திருகுணானந்தக் குருக்களின் அனுசரணையில் நடக்கிறது.

இந்த நிகழ்வின் வரிசையில், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் 35ஆவது சொற்பொழிவு கொட்டடி வில்லூன்றி வீரகத்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில், "நாவலரின் பெருமானின் சமயப்பணி" எனும் தொனிப்பொருளில் சைவப்புலவர் சைவப்புலவர் சி. கா. கமலநாதன் சொற்பொழிவாற்றுவார். நிறைவில் வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கு பாராட்டு பரிசில்கள் வழங்கப்படும். (ஐ)

■ ■ ■

யாழ்ப்பாணம், ஒக. 24

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தில் நடத்தப்படும் வாராந்த சிறப்புச் சொற்பொழிவு கோயிலின் சண்முக விலாச மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் தலைமை உரையை பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கம் ஆற்றுவார்.

சிறப்புச் சொற்பொழிவை இளம் சைவப்புலவர் த.மனோஜ்குமார் "திருமுருகாற்றுப் படையில் முருக வழிபாடு" என்ற தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

## மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஒக. 24

சிறுப்பிட்டி கிழக்கு சிவபூதராயர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் செப்ரெம்பர் 7ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு பிரம்மஸ்ரீ சுதர்சன கிரிதர குருக்கள் தலைமையில் நடைபெறும். ஆலயத்தின் எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வு கும்பாபிஷேக முதல் நாளான எதிர்வெரும் செப்ரெம்பர் 6ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நடைபெறும். (ஐ)

# உணவுப் பணவீக்கம் அதிகமான நாடுகளில் இலங்கை ஐந்தாமிடம்!

நியூயோர்க், ஒக. 24

உலகில் உணவுக்கான பணவீக்கம் அதிகம் உள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கை ஐந்தாவது இடத்தில் உள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

உலகில் உணவுக்கான அதிகளவு பணவீக்கம் கொண்ட நாடாக லெபனான் பதிவாகியுள்ளது என்று உலக வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் சிம்பாவே, வெனிசூலா, துருக்கி ஆகிய நாடுகள் முறையே இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் இடங்களில் தரப்படுத்தப்பட்டுள்ளன.

இதனிடையே, ஜூலை மாதம் பொருட்களின் விலை அதிகரிப்பு அல்லது பணவீக்கம் 66.7 வீதமாக இருந்ததாக இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவே இலங்கையில் இதுவரை பதிவான அதிகூடிய பணவீக்க வீதமாகும்.

ஜூலை மாதத்தில் உணவுப் பொருட்களின் விலை 82.5 வீதத்தால் அதிகரித்துள்ளது. பால் மா, அரிசி, மீன், பிஸ்கட் மற்றும் கோழி இறைச்சி ஆகியவற்றின் விலை அதிகரிப்பு இதில் உள்ளடங்குவதாக இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜூலை மாதத்தில் உணவு அல்லாத பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை உயர்வு 52.4 சதவீதமாக பதிவாகியுள்ளது. (ஐ)

Eelanadu
24.08.2022 புதன்கிழமை
பிலவ வருடம், ஆவணி 08

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ஜே. வி. பியின் உண்மை முகம்?

தேசிய மக்கள் சக்தி என்னும் பெயரில் இயங்கிவரும் ஜே. வி. பி. பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குமாறு தெரிவித்திருக்கின்றது. கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றார். இலங்கையின் அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான மாணவர் அமைப்பின் ஒருங்கிணைப் பாளர் வசந்த முதலிகே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நிலையிலேயே ஜே. வி. பி. மேற்படி அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றது. பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும், அவர்கள் விடுவிக் கப்பட வேண்டுமென்பதே ஜே. வி. பியின் கரிசனையாகும். ஆனால், இந்த கரிசனை ஏன் இத்தனை காலம் வரவில்லை?

இலங்கையின் பயங்கரவாத தடைச் சட்டம் என்பதே, அடிப்படையில் தமிழ் மக்களுக்கு எதிரான சட்டம்தான். இதனை நீக்குமாறு தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும், சிவில் சமூக அமைப்புக்களும் தொடர்ச் சியாகக் கோரி வருகின்றன. யுத்தம் முடிவுற்று பன்னிரெண்டு வருடங் களாகின்றன. இந்தக் காலகட்டத்தில் சர்வதேச ரீதியிலும் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குமாறு பரவலான கண்டனங்கள் முன்வைக் கப்பட்டிருந்தன.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பல தமி ழர்கள் இப்போதும் சிறைகளில் வாடுகின்றனர். அவர்களை விடு விக்குமாறும் தமிழ்த் தேசியக் கட்சிகள் தொடர்ச்சியாக குரலெழுப்பி வருகின்றன. ஆனால், இதன்போது எந்தவொரு தென்னிலங்கை கட்சிகளும் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைக்கு ஆதரவாகக் குரல் கொடுத்ததில்லை. குறிப்பாக, தங்களைப் புரட்சிகர அரசியல் தரப்பாக வலிந்து அடையாளப்படுத்திவரும் ஜே. வி. பியானது ஒருபோதுமே தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுடன் தங்களை அடையாளப்படுத்தியதில்லை. ஆனால், இன்று தங்களுக்கு வேண்டப்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டமையைத் தொடர்ந்து பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வேண்டுமென்று குரலெழுப்பு கின்றது.

தென்னிலங்கையின் இடதுசாரிகளை முற்போக்காளர்களாகவும், தமிழ் மக்களின் ஆதரவாளவர்களாகவும் பார்க்கும் ஒரு போக்கு இப்போதும் சில தமிழர்களிடம் உண்டு. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்திருந்ததும் உண்மைதான். ஆனால், காலப்போக்கில் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகிவிட்டது. சிங்கள பெருந்தேசியவாத எழுச்சிக்குள் அனைவருமே கரைந்து போனதுதான் வரலாறானது. இன்று முற்போக்காளர்கள் என்று கூறுமளவுக்கு தென்னிலங்கையில் எவருமில்லை.

ஜே. வி. பி. தங்களை இப்போதும் இடதுசாரிகளாகவும் புரட்சிகர அரசியலுக்கு சொந்தக்காரர்களாகவும் முன்னிலைப்படுத்தி வருகின் றது. அது உண்மையானால், தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்காக தென்னிலங்கையில் குரல்கொடுக்கும் அமைப்பாக ஜே. வி. பி. தன்னை நிரூபித்திருக்க வேண்டும். இன்று வரையில் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பில் ஏனைய தென்னிலங்கைக் கட்சிகள் போன்றே ஜே. வி. பியும் அமைதி காத்து வருகின்றது. வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண போன்றவர்களின் அரசியல் வங்குரோத்து நிலைமையானது, தென்னிலங்கையின் இடதுசாரி அரசியலுக்கு நல்ல உதாரணங்க ளாகும்.

ஒரு தமிழ் தலைமுறையே பயங்கரவாத தடைச் சட்டத்தாலும் அவசரகால சட்டத்தாலும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. இதன்போது தென்னிலங்கையின் எந்தவொரு முற்போக்கு சக்தியும் தமிழ் மக்களின் வலிகளை புரிந்துகொள்ள முயற்சிக்கவில்லை. இப்போது அந்த பயங்கரவாத தடைச் சட்டம் அரசுக்கு எதிரான சிங்கள கிளர்ச்சியாளர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும்போது அதனை நீக்குமாறு கோருகின்றனர். பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டுமென்பதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை. ஆனால், அதனை வெறும் இனவாத கண்கொண்டு நோக்குவதையே நாம் எதிர் கின்றோம்.




# கடற்படைக்கு காணி சுவீகார முயற்சி மக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்டது!

*முல்லைத்தீவு, ஓக. 24*

*முல்லைத்தீவு வட்டுவாகல் கோட்டாபாய கடற்படை முகாமுக்காக மக்களின் காணிகளை அளவிடும் பணிகள் பொது மக்களின் எதிர்ப் பால் நேற்றுக் கைவிடப்பட்டது. இதனால், நில அளவீட்டுக்காக சென்ற நில அளவை திணைக்கள அதிகாரிகள் அங்கிருந்து திரும்பி சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,*

*முல்லைத்தீவு வட்டுவாகல் பகுதியில் தமிழ் மக்களுக்கு சொந்தமான 617 ஏக்கர் நிலங்களை கடந்த 13 வருடங்களாக ஆக்கிரமித்து பாரிய கடற்படை முகாம் ஒன்றை கடற்படையினர் அமைத்துள்ளனர்.*

*இந்த காணிகளை கடந்த சில வருடங்க ளாக படை முகாமின் தேவைக்காக நிரந்தர மாக சுவீகரிக்கும் பொருட்டு பல தடவைகள் நில அளவை திணைக்களம் அளவீடுசெய்ய எடுத்த முயற்சிகள் மக்களினதும் மக்கள் பிரதிநிதிகளினதும் எதிர்ப்பால் கைவிடப் பட்டிருந்தன.*

*அத்துடன், காணி எடுத்தல் சட்டம் 05 ஆம் பிரிவின் (1) ஆம் சரத்திற்கு அமைய காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச் சின் கட்டளை நிமித்தம் 2017ஆண்டு ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி வெளியான வர்த்தமானி யின் பிரகாரம் கரைத்துறைபற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட வட்டுவாகல் மற்றும் முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியிலுள்ள 271.62 ஹெக்ரெயர் காணி கையகப்படுத்தப்பட்டுள் ளது என வர்த்தமானி வெளியாகியிருந்தது.*

*காணி உரிமையாளர்களான தமிழ் மக் களை காணி ஆவணங்களோடு வருகைதந்து கடற்படை முகாமுக்கு காணியை வழங்க எல்லைகளை அடையாளம் காட்டுமாறு நில அளவை திணைக்களத்தால் பல தடவைகள் அறிவித்தல் விடுக்கப்பட்டு அளவீட்டு நடவ டிக்கைகள் முன்னெடுக்கப்பட ஏற்பாடாகியி ருந்தது.*

*இந்த நிலையில் நேற்றைய தினம் மீண்டும் காணி சுவீகரிப்புக்கான அளவீட்டு பணிகள் இடம்பெறவிருந்த நிலையில் 15 காணி உரிமை யாளர்கள் இழப்பீடுகளை பெற்றுக்கொண்டு காணிகளை கடற்படைக்கு வழங்க இணக்கம் தெரிவித்து அளவீடுக்கு சென்றிருந்தனர்.*

*எனினும், ஒரு தொகுதி மக்கள் தமது காணிகளை சுவீகரிக்க எதிர்ப்பு தெரிவித்தனர். இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் மற்றும் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான ரவிகரன், சிவநேசன் ஆகி யோரும் ஈடுபட்டனர்.*

*வட்டுவாகல் காணி சுவீகரிப்பு தொடர் பில் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் காணி உரி மையாளர்களை அழைத்து பொதுவான ஒரு கூட்டத்தை மாவட்ட செயலகத்தில் கூட்டி முடிவுகளை எடுக்க வேண்டும் என பாராளு மன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் நில அளவை திணைக்கள அதிகாரிகளிடம் தெரிவித்தார்.*

*இது தொடர்பான கோரிக்கை அடங்கிய கடிதமும் காணி உரிமையாளர்களின் கையொப் பத்துடன் நில அளவை திணைக்கள அதிகாரி களிடம் வழங்கப்பட்டது.*

*இதன் பின்னணியில் அளவீட்டு பணிகளை நிறுத்தி நில அளவை திணைக்கள அதிகாரி கள் அங்கிருந்து திரும்பிச் சென்றனர். மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது, அந்த இடத்துக்கு கலகம் அடக்கும் பொலிஸார் பிரசன்னமாக்கிருந்தனர். அத்து டன், அதிகளவிலான புலனாய்வாளர்கள், போராட்டத்தில் கலந்துகொண்டவர்களை புகைப்படம் எடுத்து அச்சுறுத்தும் செயல்பாட் டில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.*

# நல்லூர் கந்தனின் தேர் வெள்ளோட்டம் இன்று!

*யாழ்ப்பாணம், ஓக. 24*


*சரித்திர புகழ்மிக்க யாழ்ப்பாணம் - நல்லூர் கந்தசுவாமி கோவிலின் புனரமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம் இன்று புதன் கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.*

*நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பரிபால கர்களான மாப்பாண முதலியார் பரம்பரை யின் மூன்றாம் இரகுநாத மாப்பாண முதலி யார் காலத்தில் ஆலயத்துக்கான முதலாவது தேர் உருவாக்கப்பட்டது.*

*அதன் பின்னர் இரண்டாம் ஆறுமுக மாப் பாண முதலியார் முருகனுக்கான தங்க ஆபர ணங்கள் மற்றும் வெள்ளி சிங்காசனம் ஆகியவற் றைச் செய்தார். இவரின் காலத்தில் சண்முகப் பெருமான் ஸ்தாபிக்கப்பட்டதுடன், சண்முகரே தேரில் ஏறி, பக்தர்களுக்கு அருள் பாலிக்கவும் தொடங்கினார்.*

*நல்லூரில் பாவனையில் இருந்த தேர் பழுதடைந்ததைத் தொடர்ந்து சண்முகதாஸ் மாப்பாண முதலியார், புதிய தேர் ஒன்றை 1964 ஆம் ஆண்டு செய்வித்தார். இந்தத் தேரே மீண்டும் புனருத்தாரணம் செய்யப் பட்டு இன்று வெள்ளோட்டம் விடப்படவுள் ளது.* (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு




**மேடம்**

முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். எதிர்பாராத செலவுகள் உண்டாக வாய்ப்புண்டு. எதிர்பார்த்த வரவு மகிழ்ச்சி தரும். வாழ்க்கை ரகசியங்களை பிறரிடம் தெரிவிக்க வேண்டாம்.

**இடபம்**

குடும்பத்தில் பிரச்னை தோன்றும். உணர்ச்சி வசப்படவேண்டாம். பேச்சில் கவனம் தேவை. அமைதி காப்பது நன்மையாகும்.வார்த்தைகளில் கவனம் தேவை. நிதானம் தேவை.

**மிதுனம்**

செயல்களில் குழப்பங்கள் வேண்டாம். எதிர்பார்த் தவற்றில் ஆதாயம் காண்பீர்கள்.விரும்பியதை அடைய முயற்சி செய்வீர்கள். எண்ணம் வெற்றி பெறும். குழப்பம் மறையும்.

**கடகம்**

எண்ணம் ஒவ்வொன்றாக நிறைவேறும். ஆடம்பர செலவால் பணம் கரையும். யோசித்து செயல்படவும். அறிவாற்றல் வெளிப்படும். எதிர்பார்த்த பணம் வரும். குடும்பத் தேவையை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்**

வராமல் இருந்த பணம் வசூலாகும். சொத்து வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். புதிய நட்புகளால் தேவைகளை அடைவீர்கள். மகிழ்ச்சி யான நாள். விலகிச் சென்ற உறவினர் தேடி வருவார்கள்.

**கன்னி**

செல்வாக்கு உயரும். வியாபாரத்தை விரிவு செய் வீர்கள். வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தினர் ஒத்துழைப்பர். அதிகாரிகளின் பாராட்டிற்கு ஆளா வீர்கள். எதிர்பார்த்த வருமானம் உண்டு.

**துலாம்**

எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்காமல் போகும். முயற்சி நிறைவேறாமல் இழுபறியாகும். புதிய நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. அறிமுகம் இல்லாதவர்களுடன் பழக்கம் வேண்டாம்.

**விருட்சிகம்**

அமைதி காப்பது நல்லது.நெருக்கமானவரிடம் மோதல் உண்டாகும். பிறரது விவகாரத்தில் தலையிட்டு பிரச்னைக்கு ஆளாகலாம். நினைப்பது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும்.

**தனுசு**

எதிர்பார்த்த வரவு வந்து சேரும். நெருக்கடி விலகும். குடும்பத்தினர் தேவைகளை நிறைவேற்று வீர்கள். வாழ்க்கைத்துணையின் விருப்பப்படி செயல்படுவீர்கள். மனதில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மகரம்**

எதிர்பார்ப்பு நிறைவேறும். உற்சாகமுடன் செயல் படுவீர்கள். நீங்கள் நினைத்ததை அடைவீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும். துணிச்சலுடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள்.

**கும்பம்**

பிள்ளைகளால் செலவுகள் அதிகரிக்கும். தேவை யற்ற குழப்பம் உண்டாகும். நெருக்கடியான நாள். எதிர்பார்த்தவற்றில் நன்மை காண முடியாமல் போகும். அதிகாரிகளால் சங்கடத்திற்கு ஆளாகலாம்.

**மீனம்**

பணிபுரியும் இடத்தில் நெருக்கடி ஏற்படலாம். குடும்பத்தினர் உங்களைப் புரிந்து கொள்ளாமல் இருப்பர்.உடல்நிலையில் எதிர்பாராத சங்கடம் தோன்றும். உங்கள் செயலில் மற்றவர்கள் குறை சொல்வர்.

# இலங்கை கடற்படையினரின் கைதுகள் சட்டவிரோதமானவை!

## பாட்டாளி மக்கள் கட்சி சொல்கிறது

சென்னை, ஓக. 24

சிங்களக் கடற்படையினரின் கைது நடவடிக்கைகள் சட்டவிரோதமானவை. இலங்கை கடற்படையினரின் இந்த நடவடிக்கைக்கு தமிழகத்திலிருந்து கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டும் கூட, அதை சிங்கள அரசு மதிக்கவில்லை. சிங்கள அரசின் அகங்காரத்திற்கும், அத்துமீறலுக்கும் முடிவு கட்டப்பட வேண்டும் - என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் ச. ராமதாஸ் கூறியுள்ளார்.

அத்துடன், “இலங்கை சிறையில் வாடும் கீச்சாங்குப்பம் மீனவர்கள் 9 பேரையும், இப்போது கைது செய்யப்பட்டுள்ள அக்கரைப்பேட்டை மீனவர்கள் 10 பேரையும் அவர்களின் படகுகளுடன் மீட்டு வர மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றும் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது ருவிற்றர் பக்கத்தில், ”நாகை மாவட்டம் அக்கரைப்பேட்டை மீனவர்கள் 10 பேர், வங்கக்கடலில் கோடியக்கரை அருகில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, சிங்களப் படையினரால் சட்டவிரோதமாக துப்பாக்கி முனையில் கைது செய்யப்பட்டுள்ளனர். சிங்களப் படையினரின் இந்த அத்துமீறல் கண்டிக்கத்தக்கது.

தமிழக மீனவர்களை சிங்களப் படை கைது செய்வது தொடர்கதையாகி வருகிறது. கடந்த இரு மாதங்களில் நடந்துள்ள ஆறாவது கைது இதுவாகும். இதுவரை மொத்தம் 48 மீனவர்களை சிங்களக் கடற்படை கைது செய்திருக்கிறது. அவர்களின் 6 படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன - என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# ஜெயலலிதா மரண விசாரணை அறிக்கை முதல்வர் ஸ்டாலினிடம் கையளிப்பு

சென்னை, ஓக. 24

ஜெயலலிதா மரணம் தொடர்பாக விசாரிக்கும் ஆறுமுகசாமி ஆணையத்தின் கால நீடிப்பு இன்றுடன் முடிவடைகிறது. இந்நிலையில், அதன் விசாரணை அறிக்கை நேற்று முதல்வரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா 2016இல் மறைந்தார். அவரின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக கூறப்பட்ட நிலையில், அதுபற்றிவிசாரிக்க முன்னாள் நீதிபதி ஆறுமுகசாமி தலைமையில் ஆணையம் அமைக்கப்பட்டு, விசாரணை நடைபெற்று வந்தது.

சசிகலா, ஓ. பன்னீர்செல்வம், அப்பலோ மருத்துவமனை மருத்துவர்கள் உள்ளிட்ட 154 பேரிடம் விசாரணை நடத்தப்பட்டது. விசாரணை தொடர்பான அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்ற நிலையில், ஆணையத்தின் பணிக்காலத்தை ஓகஸ்ட் 3ஆம் திகதி வரை நீட்டித்து தமிழக அரசு உத்தரவிட்டது.

இந்த சூழலில், எய்ம்ஸ் மருத்துவக் குழுவின் அறிக்கை கடந்த 2 நாட்களுக்கு முன்பு ஆறுமுகசாமி ஆணையத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. இந்நிலையில் ஆணையத்தின் அறிக்கை முதல்வர் ஸ்டாலினிடம் கையளிக்கப்பட்டது. (ஐ)

# மோடி கொடுப்பது இலவசமல்ல மக்களுக்கான உரிமைகளே!

## அண்ணாமலை இப்படி விளக்கம்

சென்னை, ஓக. 24

பிரதமர் மோடி கொடுப்பது இலவசங்கள் அல்ல, மக்களுக்கான உரிமைகளையே கொடுக்கிறார் என்று பா. ஜ. கவின் தமிழக தலைவர் கே. அண்ணாமலை கூறினார்.

நேற்று சென்னையில் நடந்த நிகழ்ச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

தமிழக அரசு மின் கட்டண உயர்வு குறித்து மக்களிடம் கருத்து கேட்பது என்பது மிகப் பெரிய நாடகம். அனைத்து நிறுவனங்களிடமும் வசூலிப்பதற்காக இவ்வாறு செய்கிறார்கள். அதையெல்லாம் விட்டுவிட்டு, மின்கட்டணத்தைக் குறைக்க வேண்டும்.

இதேபோல, இணைய சூதாட்டத்தை உடனடியாகத் தடை செய்வதைவிடுத்து, கருத்துக் கேட்பதில் என்ன இருக்கிறது? இணைய சூதாட்டத்தை தமிழக அரசு இரத்து செய்தால், அதற்கு பா. ஜ. க. உறுதுணையாக இருக்கும்.

இலவசங்கள் வேண்டுமா, வேண்டாமா என்பது குறித்த விவாதம் நடைபெற்று வருகிறது. மக்களுக்கு அரசு கல்வி, சுகாதாரம், குடிநீர் போன்று சிலவற்றை கொடுக்க வேண்டியது உள்ளது.

குறிப்பாக, கல்வி என்பது 100 சதவீதம் இலவசமாக இருக்க வேண்டும். ஜனநாயகத்தில் இது மக்களுடைய அடிப்படை உரிமை. இதற்கு எதிராக பாஜகவினர் யாரும் பேசவில்லை. பிரதமர் மோடி வீடு இல்லாதவர்களுக்கு வீடு கொடுக்கிறார். எரிவாயு அடுப்பு கொடுக்கிறார். இவையெல்லாம் இலவசங்கள் அல்ல. மக்களுக்குக் கொடுக்க வேண்டிய அரசின் கடமை. இதற்கு மாறாக சில அரசியல் கட்சிகள் அறிவிக்கும் இலவசங்கள் வேறு.

ராஜஸ்தானில் தேர்தல் வரவுள்ள நிலையில் அங்குள்ள காங்கிரஸ் அரசு இல்லத்தரசிகளுக்கு கைபேசி இலவசம் என அறிவித்துள்ளது. தமிழகத்திலும் தி. மு. க நிறைவேற்ற முடியாத 505 வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டு, அமைதியாக உள்ளது. அதனால், பிரதமர் மோடி கொடுப்பவை எதுவும் இலவசங்கள் அல்ல. மக்களுக்கான உரிமை என்றார் கே.அண்ணாமலை.

# தமிழகத்தில் பா.ஜ.கட்சி வளர்ச்சி என்பது மாயை!

சென்னை, ஓக. 24

தமிழகத்தில் பாரதிய ஜனதா கட்சி வளர்ந்து வருகிறது என்பது ஒரு மாயை என தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் கே. எஸ். அழகிரி தெரிவித்துள்ளார்.

ஆர். எஸ். எஸ். சித்தாந்தத்தை அப்புறப்படுத்த வேண்டும் என்பதற்காக, ராகுல் காந்தி தலைமையில் கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீர் வரை நடைபயணம் மேற்கொள்ளப்பட உள்ளது. செப்.7 ஆம் திகதி தொடங்கும் இந்த நடைபயணத்தில், தமிழகம் முழுவதிலும் இருந்து ஏராளமான காங்கிரஸ் தொண்டர்கள் பங்கேற்க உள்ளனர்.

தமிழகத்தில் ஆளுநர் ஆர். என். ரவி போட்டி அரசாங்கம் நடத்தி வருகிறார். ஆளுநர் மாளிகையில் அரசியல் ரீதியான சந்திப்புகள், கருத்தரங்குகள் நடத்தப்படுவது முறையல்ல.

பா. ஜ. க. தமிழகத்தில் காலூன்றுவது என்பது அரசியல் பூர்வமாகவும், அறிவியல்பூர்வமாகவும் நடக்காது. ஆட்சி அதிகாரத்தில் இருப்பதன் காரணமாக பா. ஜ. கவுக்கு கூட்டம் கூட்டப்படுகிறது. காங்கிரஸ் கட்சிக்கு வருகிற கூட்டம், தானாக சேருகிற கூட்டம். பா. ஜ. க. தமிழகத்தில் வளர்ந்து வருகிறது என்று கூறப்படுவது ஒரு மாயை.

தமிழகத்தில் பல்வேறு அதிகார கட்டமைப்புகளை ஒருங்கிணைத்து ஓர் ஆட்சி நடத்தப்பட்டு வரும்போது, அதில் பங்கேற்பாளர்களாக இருக்கும் அதிகாரிகள் ஒரு சிலர், இந்துத்துவா கொள்கை உடையவர்களாக இருக்கலாம். அவர்களின் செயல்பாட்டை ஆட்சியின் செயலாக, கொள்கையாக கருதக்கூடாது - என்றும் கூறினார்.

# பாதுகாப்பு உள்ளிட்ட சலுகைகள் கோட்டாவுக்கு வழங்கவேண்டும்!

## ஜனாதிபதியிடம் மனித உரிமை ஆணைக்குழு கோரிக்கை

கொழும்பு, ஓக. 24

**“இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் கோட்டாபய ராஜபக்சவுக்குச் சட்டபூர்வமாகக் கிடைக்க வேண்டிய பாதுகாப்பு உள்ளிட்ட வரப்பிரதாசங்களை ஏற்படுத்திக் கொடுக்கவும்.”**

- இவ்வாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

“முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கு சட்டபூர்வமாகக் கிடைக்கவேண்டிய பாதுகாப்பு தொடர்பான உத்தரவாதம் கிடைக்காமையால், கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நாடு திரும்ப முடியாதுள்ளது என மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

எந்தவொரு பிரஜைக்கும் தமது நாட்டுக்கு வருவதற்கான உரிமை இருக்க வேண்டும்.

எனவே, முன்னாள் ஜனாதிபதிக்குச் சட்டபூர்வமாகக் கிடைக்க வேண்டிய வரப் பிரதாசம் உள்ளிட்ட சலுகை கள் கோட்டாபய ராஜபக்சவுக்கும் வழங்கப்பட வேண்டும். பாதுகாப்பு தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டும். அவரின் குடும்பத்தாரும் நாட்டுக்கு வருவதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்”

- என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# வேர்க்கடலை இறக்குமதி நிறுத்தம்!

கொழும்பு, ஓக. 24

இதுவரை ஜம்போ வேர்க்கடலை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்தது. எனினும் இப்போது ஜம்போ வேர்க்கடலை வகைக்கு மாற்று வகை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஜம்போ எனப்படும் மாற்று வகை கடலை இறக்குமதி செய்யப்படும் கடலையை விட தரத்தில் உயர்வானது என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

எனவே இனிமேல் கடலையை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லை என விவசாய, வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நம் நாட்டில் நிலக்கடலையின் ஆண்டுத் தேவை 30,000 மெற்றிக் தொன்களாகும். ஆனால் தற்போது நிலக்கடலை உற்பத்தி 64,000 மெற்றிக் தொன்னாக அதிகரித்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# கோதுமை மா தட்டுப்பாடு!

கொழும்பு, ஓக. 24

நாட்டில் கோதுமை மாவுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால், பேக்கரி தொழிலை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்தார்.

பேக்கரி பொருட்களின் விலையேற்றம் காரணமாக தமக்கு அசௌகரியம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# 100ஆவது ஆண்டு கூட்டுறவு தின விழா!

யாழ்ப்பாணம், ஓக. 24

யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு சபை நடத்தும் 100ஆவது ஆண்டு சர்வதேச கூட்டுறவு தின விழா எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட கூட்டுறவு சபை உப தலைவர் க. மகாதேவன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி. சந்திரசேகரன், வடக்கு பெற்றோலிய கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளர் சி. சிவதரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில், அளவெட்டி - மல்லாகம் ப. நோ. கூ. சங்கத் தலைவர் கே. கணேசலிங்கம் சிறப்புரை ஆற்றவுள்ளார்.

இந்நிகழ்வில் கூட்டுறவு சபை நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களின் பேச்சும் அவர்களுக்கான பரிசில்கள் வழங்களும் இடம்பெறவுள்ளது. (ஐ)

# மாணவர்களுக்குச் சீருடை வழங்குவதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஓக. 24

2023 ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடைத் துணித் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்காகக் கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட இணை அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் பந்துல குணவர்தன இதனை தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் குறித்த யோசனைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதாக அமைச்சர் மேலும் கூறினார்.

2023 ஆம் ஆண்டுக்கான சீருடைத்துணி 2022 ஆம் ஆண்டு பாடசாலை இறுதித் தவணைக்கு முன்னர் மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டும். இலங்கை அரசாங்கத்தால் சீனக் குடியரசுக்கு விண்ணப்பிக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க, 2023 ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடைத் துணித் தேவையின் ஒருபகுதியை இலவசமாக வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சீனக்குடியரசால் வழங்கப்படும் சீருடைத் துணிக்கு மேலதிகமான தேவையை உள்ளூர் துணி உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்து 2023 ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடைத் துணித் தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கே இவ்வாறு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)









வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் 22ஆம் நாள் திருவிழாவான மாம்பழ திருவிழா, பக்தர்கள் புடைசூழ நேற்று சிறப்பாக இடம்பெற்றது. காலை 6.45 மணியளவில் வசந்தமண்டப பூஜை இடம்பெற்று, தொடர்ந்து முருகப்பெருமானும் பிள்ளையாரும் வெளி வீதி உலா வந்து மாம்பழ திருவிழா இடம்பெற்றது. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# இரண்டு வருடங்களுக்கு நாட்டில் எந்த தேர்தலையும் நடத்தமுடியாது!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



**கொழும்பு, ஓக. 24**

**இரண்டு வருடங்களுக்கு எந்தத் தேர்தலையும் நடத்த முடியாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார் எனத் தென்னிலங்கை தகவல்கள் தெரிவிக்கின்றன.**

தேர்தலை நடத்துமாறு கோரி மக்கள் விடுதலை முன்னணியால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றிடம் கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது: -

எதிரணியில் உள்ள ஒரு சில கட்சிகள் கூறுவது போல் தேசிய ரீதியில் தேர்தல் ஒன்றை இப்போதைக்கு நடத்த முடியாது. இரண்டு வருடங்களுக்கு எந்தத் தேர்தலையும் நடத்த முடியாது. உள்ளூராட்சிச் சபைத் தேர்தலையாவது நடத் தும்படி சில கட்சிகள் பரிந்து ரைத்துள்ளன. அது தொடர்பில் பரிசீலித்து வருகின்றோம்.

மக்களின் வயிற்றுப் பிரச்னைக்கு முதலில் நிரந்தரத் தீர்வு காணவேண்டும். அதன்பின்னரே ஏனைய பிரச்சினைகளுக் குத் தீர்வு காண முடியும்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் தற்போதைய அரசிடம் உண்டு. நானும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்துடன்தான் ஜனாதிபதியாகத் தெரிவாகினேன். இந்நிலையில், தேர்தலை வைத்துப் பெரும்பான்மையை நிரூபிக்கவேண்டிய அவசியம் இல்லை.

எந்தவொரு தேர்தலையும் மக்கள் இப்போது விரும்பவில்லை. எதிரணியிலுள்ள ஒரு சில கட்சிகள்தான் தேர்தலை விரும்புகின்றன. முதலில் பொருளாதார நெருக்கடிக்கு ஒன்றி ணைந்து தீர்வுகாண முன்வருமாறு தேர்தலை விரும்பும் கட்சி களுக்கு மீண்டும் மீண்டும் அழைப்பு விடுக்கின்றேன்- என்றார். (அ)

# ஆசிரியர் பயிலுநர்களுக்கு சலுகை வட்டியில் நிதியுதவி

கொழும்பு, ஓக. 24

தேசிய கல்வியற் கல்லூரிகளில் பயிற்சிபெறும், ஆசிரியர் பயிலுநர்களுக்கு சலுகை வட்டி அடிப்படையில், அரச வங்கியில் நிதியை பெற்றுக்கொள்ள வசதி ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள, கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு தெரிவு செய்யப்பட்டு 2 வருடங்கள் கல்விசார் பயிற்சிகளிலும், ஒரு வருடம் உள்ளகப் பயிற்சியும் வழங்கப்பட்டு ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

ஒரு வருட கால உள்ளகப் பயிற்சிக்காக, தங்குமிடம் மற்றும் போக்குவரத்துச் செலவுகளை ஆசிரிய பயிலுநர்கள் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டி ஏற்படுகின்றது.

தற்போது ஆசிரிய பயிலுநர் ஒருவருக்கு கல்விசார் பயிற்சியின்போது செலுத்தப்படும் 5,000 ரூபா கொடுப்பனவு போதுமானதாக இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால், ஆசிரிய பயிலுநர்களுக்கு தற்போது கிடைக்கும் கொடுப்பனவுக்கு மேலதிகமாக மாதமொன்றுக்கு உயர்ந்த பட்சம் மேலும் 10,000 ரூபா நிதி வசதியை சலுகை வட்டி அடிப்படையில் அரச வங்கியொன்றினூடாகப் பெற்றுக் கொள்வதற்கு இயலுமாகும் வகையில் வசதி ஏற்படுத்தப்படவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். (அ)

# கொரோனா மரணங்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 24

நாட்டில் பதிவாகும் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதுவரை கொவிட் தடுப்பூசியைப் ஏற்றிக் கொள்ளாதவர்கள் தடுப்பூசி செலுத்திக் கொள்வதன் மூலம் தொற்றைக் கட்டுப்படுத்த முடியும் என சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப்பிரிவின் விசேட வைத்திய நிபுணர், வைத்தியர் சமித கினிகே தெரிவித்தார்.

கோவிட் தொற்றினால் உயிரிழந்தவர்களில் அதிகளவானோர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதனிடையே, கொவிட் தொற்றினால் மேலும் 6 பேர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளனர். (அ)

# 1126 மெற்றிக் தொன் நெல் 4 நாள்களில் கொள்வனவு!

கொழும்பு, ஓக. 24

நெல் சந்தைப்படுத்தல் சபையினால் கடந்த நான்கு நாட்களில் விவசாயிகளிடமிருந்து 1,126 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் நீல் டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

நெல் கொள்முதலின் நான்காவது நாளான நேற்று முன்தினம் மொத்தம் 282 மெற்றிக் தொன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

நெல் அறுவடை செய்யப்படும் பிரதேசங்களில் நெல் கொள்வனவு செய்வதற்காக 73 சேமிப்பு அலகுகள் திறக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# கொள்ளையுடன் தொடர்புடைய 4 பொலிஸ் அலுவலர்கள் கைது!

கொழும்பு, ஓக. 24

கொட்டாவ வித்தியால சந்தியில் இளைஞர் ஒருவரிடமிருந்து தங்க நகை மற்றும் கைப்பேசியை கொள்ளையடித்த குற்றச்சாட்டில் மாலபே பொலிஸில் கடமையாற்றும் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டதாக கொட்டாவ பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகத்திற்குரிய பொலிஸ் உத்தியோகத்தர்களில் சார்ஜன்ட் ஒருவரும் மற்றும் மூன்று கான்ஸ்டபிள்களும் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மூன்று கான்ஸ்டபிள்களில் ஒருவர் மாலபே பொலிஸின் விசேட பொலிஸ் பணியகத்தில் கடமையாற்றுவதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவர்கள் கொள்ளைக்கு பயன்படுத்திய ஓட்டோ, திருடப்பட்ட தங்க நகை மற்றும் கையடக்க தொலைபேசி என்பவற்றை பொலிஸார் மீட்டுள்ளனர். (அ)

# வசந்த முதலிகே விசாரணை; ஜனாதிபதி ரணில் விளக்கம்!

கொழும்பு, ஓக. 24

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட மூவரையும் தடுத்து வைத்து விசாரணை செய்யப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தப்படுத்திய மையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியாயப்படுத்தியுள்ளார்.

"போராட்டங்களின்போது பயங்கரவாதச் செயற்பாடுகள் இடம்பெற்றனவா என்பது தொடர்பில் பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்தியே விசாரணைகளை மேற்கொள்ள முடியும்" என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

வசந்த முதலிகேயின் கைதுடன் அரசைத் தொடர்புபடுத்த வேண்டாம் என்றும் அவர் கோரியுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வசந்த முதலிகே வைத் தடுத்து வைக்கும் உத்தரவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையெழுத்திடக் கூடாது என்று மனித உரிமை பாதுகாவலர்கள் தொடர்பிலான ஐ.நா.வின் விசேட அறிக்கையாளர் மேரி லோலர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கொழும்பு ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது: -

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே பழிவாங்கும் நோக்கில் கைதுசெய்யப்படவில்லை. அவர் மீது ஏற்கனவே பல குற்றச்சாட்டுகள் நீதிமன்றத்தில் உள்ளன. அவரைக் கைதுசெய்யும் உத்தரவை நீதிமன்றத்திடம் ஏற்கனவே பொலிஸார் பெற்றிருந்தனர்.

இந்நிலையில், சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் முறையற்ற விதத்தில் நடைபெற்ற போராட்டத்தில் பங்கேற்ற அவர் உள்ளிட்ட மூவர் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். நாட்டில் அண்மையில் மக்கள் எழுச்சிப் போராட்டங்களுக்கு இடையில் தோற்றம் பெற்ற பயங்கரவாத நடவடிக்கைகளுடன் அவர்களுக்குத் தொடர்பு உண்டா என்ற ரீதியிலும் பாதுகாப்பு அமைச்சு மற்றும் நீதிமன்றத்தின் அனுமதியுடன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், வசந்த முதலிகே உள்ளிட்ட மூவரின் கைதுக்கும் அரசுக்கும் இடையில் எவரும் முடிச்சுப் போட வேண்டாம். அவர்கள் மூவரினதும் விவகாரம் தொடர்பில் நீதித்துறையே இறுதி முடிவு எடுக்கும். பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பில் விசாரணை செய்யும்போது பயங்கரவாதத் தடைச் சட்டமும் பயன்படுத்தப்படும். இது புதிய விடயம் அல்ல-என்றார். (அ)

# குடத்தனை உப தபாலகருக்கு எதிராக இரண்டாம் நாளாக மக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 24

குடத்தனை உப தபாலகருக்கு எதிராக நேற்று இரண்டாவது நாளாகப் பாதிக்கப்பட்ட மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 2018 ஆம் ஆண்டு வரை உப தபாலதிபராக பணியாற்றி வந்த அவர் வறிய மக்களின் பொதுசன மாதாந்த கொடுப்பனவு, மின்சாரப் பட்டியல் கொடுப்பனவு, தேசிய சேமிப்பு வங்கி உட்பட பல வேறு மக்கள் நிதிகளை மோசடி செய்து ஏமாற்றியுள்ளார் என்றும், இதனால் பாதிக்கப்பட்ட மணல்காடு, குடத்தனை, அம்பன் பகுதிகளைச் சேர்ந்த மக்களே கடந்த 2 நாள்களாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

குறித்த உப தபாலகர் கடந்த 2018 ஆம் ஆண்டுவரை குறித்த குடத்தனை உப தபாலகத்தில் பணியாற்றி வந்தார். மக்கள் பண மோசடி தொடர்பில் குறித்த உப தபாலகருடன் முரண்பட்டிருந்தனர். இதனை அடுத்து தாமாகவே பதவியிலிருந்து விலகி சென்றார். அவர் தபால் திணைக்களத்தால் 3 ஆண்டுகளின் பின்னர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

நான்கரை ஆண்டுகள் பணியாற்றிய பதில் உப தபாலகரை பணிநீக்கம் செய்து மீண்டும் ஏதோ ஒருவகையில் மீள் நியமனம் பெற்று கடந்த சனிக்கிழமை இரகசியமான முறையில் பணியில் இணைக்கப்பட்டார்.

இதனை அறிந்து கொண்ட பாதிக்கப்பட்ட மக்கள் நேற்று முன் தினம் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவேளை சம்பவ இடத்திற்கு வருகை தந்த பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்க பாதிக்கப்பட்ட மக்களை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறும், குறித்த உப தபாலகர் இனி குடத்தனை உப தபாலகத்துக்கு பணிக்கு வருகை தரமாட்டார் எனவும் உத்தரவாதம் அளித்தார்.

ஆயினும் மீண்டும் நேற்று குறித்த உபதபாலகர் பணிக்காக வந்தவேளை அங்கு தமது பணத்தைக் கேட்கச் சென்ற பாதிக்கப்பட்ட மக்களைக் கண்டவுடன் அலுவலகத்தை திறந்தும் உள் செல்லாமல் வெளியேறியுள்ளார்.

இதேவேளை, குறித்த மோசடிகள் தொடர்பில் எந்தவித நடவடிக்கையோ மேற்கொள்ளாது பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிராக தபால் திணைக்களம் செயற்பட்டு வருவதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

குறித்த தபாலகரால் பாதிக்கப்பட்டவர்கள் பலர் நேற்று பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளனர். (அ-02)

# கொரோனா தடுப்பூசியை கட்டாயம் பெற்றுக்கொள்க!

## வவுனியா சுகாதாரப் பிரிவினர் கோரிக்கை

வவுனியா, ஓக. 24

வவுனியாவில் கொவிட் தொற்று மீண்டும் அதிகரித்து வருவதனால் தடுப்பூசியினை பெற்றுக்கொள்ளாதவர்கள் அதனைப் பெற்று கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர்.

கோவிட் தொற்று நாட்டில் அதிகரித்து வருகின்றது. கோவிட் மரணங்கள் பதிவாகியுள்ளதுடன், பலர் கோவிட் தொற்றுக்குளாகியும் உள்ளனர். இதன் காரணமாக கோவிட் தொற்று தீவிர நிலையை அடையாது தடுக்கும் நடவடிக்கையாக பைசர் கோவிட் தடுப்பூசிகள் மீள ஏற்றப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் வவுனியா மாவட்டத்தில் 3ஆவது கோவிட் தடுப்பூசியை 43 வீதமானவர்களும், வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 35 வீதமானவர்களும், வவுனியா வடக்கில் 35 வீதமானவர்களுமே தடுப்பூசிகளை பெற்றுள்ளனர். அத்தோடு 4ஆவது தடுப்பூசி (பைசர்) வெளிநாடு செல்பவர்கள் மாத்திரமே குறைந்தளவில் செலுத்தியுள்ளனர்.

இதுவரை தடுப்பூசிகளை முறையாக பெறாதவர்கள் (1,2,3,4) தடுப்பூசிகளை பெற்றுக் கொள்வதோடு, சுகாதார நடைமுறைகளையும் பின்பற்றுமாறு சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (அ)

# பயங்கரவாத தடைச் சட்டம் உடனே நீக்கப்படவேண்டும்!

## மனோ கணேசன் வலியுறுத்து



கொழும்பு, ஓக. 24

**பயங்கரவாதத் தடைச் சட்டம் உடன் நீக்கப்படவேண்டும் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் வலியுறுத்தியுள்ளார்.**

இது குறித்து அவர் இட்டுள்ள முகநூல் பதிவு வருமாறு:

வசந்த முதலிகே போன்றோரை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அடைத்து, வதைப்பதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஆனால் இந்த சட்டம், 1978 இல் இருந்து இலங்கையில் இருக்கின்றது என்பதையும், அது பிரதானமாக தமிழருக்கு எதிராக 40 வருடங்களாக பயன்படுகிறது என்பதையும், இதற்கு பொருத்தமான பெயர் "அரச பயங்கரவாத சட்டம்" என்பதையும் மனதில் கொள்ள வேண்டும்.

ஆகவே தம்பி முதலிகே வெளியே வரவேண்டும்.

அதற்கு முன் அல்லது அதே போல், இந்த சட்டத்தால் பல ஆண்டுகளாக சிறைவாசத்தில் இருக்கும், நம் அண்ணன்மார்களும், தம்பிமார்களும் வெளியே வரவேண்டும்.

ஆகவே இந்த சட்டம் ஒழிக்கப்படவேண்டும். இந்த சட்டத்தால் கைதாகி, இன்று நீதி மன்ற தீர்ப்பின்படி சிறைவாசம் அனுபவிப்போர், வழக்குகளை எதிர்கொள்வோர், விசாரணை தடுப்பு கைதிகளாக இருப்போர் என்ற அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும் - என்றுள்ளது. (அ)

# பட்ஜெட்டில் அரச வருமானத்தை 11.3 வீதமாக அதிகரிக்க அனுமதி

கொழும்பு, ஓக. 24

அரச வருமானத்தை 11.3 வீதமாக அதிகரிப்பது உட்பட நான்கு முக்கிய விடயங்களை இலக்காகக் கொண்டு 2023 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்ட மதிப்பீடுகளை தயாரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் இதற்கான யோசனை முன்வைக்கப்பட்டது.

அதன்படி, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9 வீதம் உள்ள அரச வருமானத்தை 11.3 வீதம் ஆக உயர்த்தவும், 18.9 வீதம் ஆக இருக்கும் அரச செலவினத்தை 18.1 வீதமாகவும், முதன்மை வரவு செலவுத் தொகையை - 4 வீதத்திலிருந்து -1 வீதமாகவும் குறைக்கவும் மற்றும் - 9.9 வீதத்திலிருந்து மைனஸ் - 6.8 வீதமாக வரவு செலவுத் திட்ட இடைவெளியைக் குறைக்கும் இலக்குகளை அடைவதற்காக இந்த வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க அமைச்சரவை அனுமதி கோரப்பட்டது.

அதன்படி, 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை பூச்சிய அடிப்படையிலான வரவு-செலவுத் திட்ட முறையின் அடிப்படையில் உருவாக்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது. (அ)

# மலையகச் சிறார்களின் உரிமையை காப்போம்!

## சிவில் கூட்டமைப்பு வலியுறுத்து

கொழும்பு, ஓக. 24

"ஜனநாயக வழியில் போராடிய, போராட்டக்காரர்கள்மீது பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவது பாரதூரமான விடயமாகும். எனவே, பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் உடன் விடுவிக்கப்படவேண்டும்." - என்று மலையக சிவில் அமைப்புகளின் கூட்டணி வலியுறுத்தியுள்ளது.

ஹற்றனில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே மேற்படி கூட்டமைப்பின் தலைவர் கணேசலிங்கம் இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாடு கடும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியது. மக்கள்மீது சுமைகள் திணிக்கப்பட்டன. எனவே, நாட்டை மீட்கவும், அரசியல் மற்றும் ஜனநாயக மறுசீரமைப்புகளை கோரியுமே மக்கள் வீதிகளில் இறங்கினர். ஜனநாயக வழியில் போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன. இதன் விளைவாக முன்னாள் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டோருக்கு பதவி விலக வேண்டி ஏற்பட்டது.

போராட்டத்தால்தான் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானார். எனினும், பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தி, போராட்டக்காரர்களை கைது செய்யும் நடவடிக்கைக்கு அவர் அனுமதி வழங்கியுள்ளார். பல்கலைக்கழக மாணவர்களும் அந்த சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தி கைது செய்யப்பட வேண்டியவர்கள் சுமந்திரமாக நடமாடுகின்றனர். ஆனால் நீதிக்காக போராடியவர்கள் தண்டிக்கப்படுகின்றனர். எனவே, கைதுகள் உடன் நிறுத்தப்படவேண்டும். வன்முறையில் ஈடுபட்டவர்களை தண்டிக்கலாம். ஆனால் ஜனநாயக வழியில் போராடியவர்கள் விடுவிக்கப்பட வேண்டும்.

அதேவேளை, மலையக சிறார்கள் வேலைக்கு அமர்த்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும். பொருளாதாரச் சிக்கலை பயன்படுத்தி, மலையக சிறார்கள் இலக்கு வைக்கப்படுகின்றனர். இதனை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சிறுமி ரமணியின் மரணத்தை சாதாரணமாக கருதிவிட முடியாது - என்றார். (அ)

# மணல் வியாபாரத்தில் மாபியாக்களின் தலையீட்டை தடுப்பது குறித்து ஆராய்வு

கொழும்பு, ஓக. 24

கட்டடப்பணிகளுக்குத் தேவையான மண்ணை முறையாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மணல் வியாபாரத்தில் நிலவும் மாபியாக்களின் தலையீடு மற்றும் முறைகேடுகளை ஒழித்து, நியாயமான சேவைகளை மக்களுக்கு வழங்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுற்றாடல்துறை அமைச்சில் அமைச்சர் நஸீர் அஹமட் தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற கூட்டத்திலே இம்முடிவு எடுப்பட்டது.

அமைச்சின் செயற்பாடுகளை வினைத்திறனாக்கும் வகையில் வாரமொரு தடவை இவ்வாறான கூட்டங்களை நடத்துவதற்கு அமைச்சர் நஸீர் அஹமட் அண்மையில் தீர்மானித்திருந்தார்.

இதற்கமைய நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் மணல் அகழ்வு, இத்தொழிலில் ஈடுபடுவோர் எதிர்கொள்ளும் பிரச்னைகள் இன்னும் இதற்காக அனுமதி வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டது. முறையற்ற மணல் அகழ்வுகள் சூழலில் ஏற்படுத்தும் மாற்றங்கள் பற்றியும் இதைத் தடுப்பதற்குரிய வழிகள் குறித்தும் அமைச்சின் உயரதிகாரிகள் அமைச்சருடன் கலந்துரையாடினர்.

மேலும்,முறையான மணல் அகழ்வுகளால், சாதாரண பொதுமக்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இடைத்தரகர்கள் தலையிடுவதால்,விலைகள் தேவையற்ற வகையில் உயர்கிறது.

சாதாரண வீடொன்றைக் கட்டுவதற்கு கூட,இவர்களால் மணலை பெற முடியாதுள்ளது. டிராக்டர்கள்,லொறிகளில் மணலை ஏற்றுவதை தவிர்த்து ரயில்பெட்டிகள், ரயில் இழுவைப் பெட்டிகளில் ஏற்றுவதற்கும் இக்கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டது. அதிக மணலை ஒரே தடவையில் கொண்டு வர, ரயில் பெட்டிகள் உதவும். காலவிரயம் மற்றும் பொருள் விரயத்தையும் (வெளியில் விழல்) இதனால் தவிர்க்கலாம். நேரடியாக,மணல் கடத்தலில் நேரடித் தொடர்புடையோரை அடையாளம் கண்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தவும் அமைச்சர்,அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அமைச்சில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க, மேலதிக செயலாளர் ரூபசிங்க, புவியியல் சேவை மற்றும் நில அகழ்வுப் பணியகத் தலைவர் சேனரத் ஹேவகே மற்றும் அமைச்சரின் ஆலோசகர் திரு ஹெட்டியாராச்சி, முக்கிய அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (அ)

# மன்னாரில் பாவனைக்கு உதவாத 5000 கிலோ கோதுமை மா பறிமுதல்!

மன்னார், ஓக. 24

மன்னார் மூர்வீதி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் உரிய அனுமதியின்றி பதுக்கி வைக்கப்பட்டிருந்த பாவனைக்கு உதவாத 50 கிலோ கிராம் நிறையுடைய 100க்கும் அதிகமான கோதுமை மா மூடைகள் மன்னார் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் நேற்று செவ்வாய்கிழமை மதியம் கைப்பற்றப்பட்டன.

மன்னார் பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவு மற்றும் பிரதேச குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மன்னார் மூர்வீதி பகுதி வீடு ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பாவனைக்கு உதவாத முறையில் களஞ்சியப் படுத்தாத 100க்கும் மேற்பட்ட கோதுமை மா மூடைகள் கைப்பற்றப்பட்டன.

குறித்த கோதுமை மா மூடைகள் அனைத்தும் களஞ்சியப்பட்டிருந்த அறைக்கு சீல் வைக்கப்பட்டு மூடப்பட்டதுடன், மன்னார் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் குறித்த மா மூடைகளைக் களஞ்சியப்படுத்தி வைத்திருந்த நபருக்கு எதிராகவும் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது.

குறித்த நபர் மன்னார் நகரப் பகுதியில் வெதுப்பகம் ஒன்றை நடத்தி வருகிறார். கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னதாகவும் குறித்த வெதுப்பகத்தில் பாவனைக்கு உதவாத மா மூடைகள் களஞ்சியப் படுத்தப்பட்டிருந்த நிலையில் சுகாதாரப் பரிசோதகர்களால் கண்டறியப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (அ)

# இந்திய தலைவரைக் கொல்ல பயங்கர சதி! ஐ எஸ் தீவிரவாதி ரஷ்யாவில் வைத்து கைது!

இந்தியாவில், ஆளுங்கட்சியைச் சேர்ந்த மூத்த மற்றும் முக்கிய தலைவர் மீது தற்கொலை படை தாக்குதல் நடத்தி படுகொலை செய்ய அனுப்பப் பட்ட மத்திய ஆசியாவைச் சேர்ந்த ஐ.எஸ்., பயங்கரவாதியை, ரஷ்ய உளவுத் துறையினர் அந்நாட்டில் கைது செய்தனர். மேற்காசிய நாடுகளான ஈராக் மற்றும் சிரியாவில் தொடர் படுகொலை களை நிகழ்த்தி வரும் பயங்கரவாத அமைப்பான, ஐ.எஸ்.ஐ.எஸ்., எனப்படும், "இஸ்லாமிக் ஸ்டேட் ஆப் ஈராக் அண்டு சிரியா" மற்றும் அதனுடன் தொடர்புடைய பல்வேறு அமைப்புகள், இந்தியா உட்பட பல்வேறு நாட்டு இளைஞர்களை மூளை சலவை செய்து, பயங்கரவாத அமைப்பில் சேர்த்து வருகின்றன.



**அப்பாவி இளைஞர்கள்**

இந்த அமைப்பினர், உலகம் முழுதும் நடத்தும் பல்வேறு தாக்குதல்களில், பல அப்பாவி இளைஞர்கள் தற்கொலை படையினராக மாறி உயிரை விடுகின் றனர். இதையடுத்து, இந்தியாவில் ஐ.எஸ்., உட்பட அதன் தொடர்புடைய அனைத்து அமைப்புகளும், யு.ஏ.பி.ஏ., எனப்படும் சட்டவிரோத நடவடிக்கை தடுப்பு சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டு உள்ளன.

இந்நிலையில், மத்திய ஆசிய நாட்டைச் சேர்ந்த ஐ.எஸ்., பயங்கரவாதி, ரஷ்யாவில் சமீபத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். அவரது பெயர் உள்ளிட்ட விபரங்கள் வெளியிடப்படவில்லை. ரஷ்யாவின் உளவு அமைப்பான எப்.எஸ்.பி., எனப்படும், "பெட ரல் செக்யூரிட்டி சர்வீஸ்" அதிகாரிகள் இந்த பயங்கர வாதியை கைது செய்தனர்.

இது குறித்து, எப்.எஸ்.பி., அமைப்பு வெளியிட்ட அறிக்கையில்: "தடை செய்யப்பட்ட ஐ.எஸ்., பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த நபர் ரஷ்யாவில் அடையாளம் காணப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார். இவர், மத்திய ஆசிய நாட்டைச் சேர்ந்தவர் என்பது தெரிய வந்துள்ளது. இந்தியாவில் ஆளுங்கட்சியைச் சேர்ந்த மூத்த தலைவர் மீது தற்கொலை படை தாக்குதல் நடத்தி, படுகொலை செய்வதற்காக இந்த பயங்கரவாதி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர், மேற்காசிய நாடான துருக்கியில் இருந்த போது, ஏப்ரல், ஜூன் மாதங்களில் இந்த பணி இவரி டம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. "இந்த பணியை வெற்றிகரமாக செய்து முடிப்பேன்" என, இவர் ஐ.எஸ்., தலைவரிடம் சத்தியம் செய்த பின், துருக்கியில் இருந்து ரஷ்யாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். இங்கு, அவர் சில ஆவணங்களை தயார் செய்த பின், இந்தியா சென்று படுகொலையை நிகழ்த்த திட்டமிட்டுஇருந்தார்." இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வீடியோ ஆதாரம்:**

ரஷ்ய உளவுத் துறையான எப்.எஸ்.பி., பயங்கரவாதியிடம் நடத்திய விசாரணை யில், "வீடியோ" காட்சிகளை உளவுத் துறை யின் மக்கள் தொடர்புத் துறை வெளியிட் டுள்ளது. அதில், "இந்தியாவில் முஸ்லிம் மதம் குறித்து அவதுாறான கருத்துக்களை தெரிவித்ததற்காக, ஆளுங்கட்சி தலைவரை படுகொலை செய்யும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. "இதற்காக சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. அதன் பின், ரஷ்யா வந்து சேர்ந்தேன். இங்கிருந்து இந் தியா செல்ல ஏற்பாடு செய்யப்பட்டு இருந் தது" என, பயங்கரவாதி தெரிவிக்கும் காட்சிகள் இடம் பெற்றுள்ளன.

**தற்கொலை தாக்குதல்**

இஸ்லாம் குறித்து அவதுாறான கருத்துக்களை தெரிவித்ததற்காக, பா.ஜ., செய்தி தொடர்பாளர் நுாபுர் சர்மா மற்றும் அக்கட்சியின் டில்லி ஊடகப் பிரிவு தலைவர் நவீன்குமார் ஜிண்டால் ஆகியோர் சமீபத்தில் கட்சியை விட்டு நீக்கப்பட்டனர். கைது செய்யப்பட்டுள்ள பயங்கரவாதி, அவர்களை கொல்ல ஏவப்பட்டவரா அல்லது பா.ஜ.,வைச் சேர்ந்த வேறு தலைவரை கொல்ல அனுப்பப்பட்டாரா என்பது இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

ஆனால், இந்திய தலைவர் மீது நடத்தப்பட இருந்த மிகப் பெரிய தற்கொலை தாக்குதல் முறியடிக்கப்பட் டுள்ளது.

# சென்னை நாள் சிந்தனை

**சென்**னை தினத்தையொட்டி ஒரு வாரத்துக்கு கொண்டாட் டங்கள் நடத்தப்படுகின்றன. ஆண்டு தோறும் ஆகஸ்ட் 22-ஆம் திகதி சென்னை தினமாகக் கொண்டாடப்படு கிறது. அதன்படிப் பார்த்தால் சென்னைக்கு வயது 383. அடுத்த 17 ஆண்டுகளில் நான்கு நூற் றாண்டுகளைக் கடந்த நகரமாக சென்னை வரலாறு படைக்கும்.




மீனவக் குப்பமாகவும் சென்னப் பட்டணம் என்றும் அறியப்பட்டிருந்த, சில நூறு மக்கள் மட்டுமே வாழ்ந்திருந்த கடலோரப் பகுதி என்று வர லாற்று ஆய்வாளர்கள் சிலரால் சென்னை வர்ணிக்கப்படுகிறது. திருவல்லிக்கேணி திருவேட் டீஸ்வரர் கோயிலும், பார்த்தசாரதி கோயிலும், திருமயிலை கபாலீஸ்வரர், பாடி வாலீஸ்வரர் கோயிலும் பல நூற் றாண்டு கால வரலாறு கொண்டவை. பாடி வாலீஸ்வரர் கோயிலும், திரும யிலை கபாலீச்சரமும், திருவான்மியூர் மருந்தீஸ்வரர் கோயிலும், திருவெற்றியூர் தியாகராஜர் கோயிலும் நாயன்மார் களால் போற்றப்பட்ட பாடல் பெற்ற தலங்கள். அப்படியிருக்கும்போது அவற்றை உள்ளடக்கிய சென்னை மாநக ரத்தின் வயது வெறும் 400-க்கும் கீழே என்பதை ஏற்றுக்கொள்ள முடிய வில்லை.

ஒருவேளை ஆங்கிலேயர்களின் வருகைக்குப் பின்தான் சென்னை ஒன்று பட்ட மாநகரமாக உருவாகியது என்ப தால், அதன் காலத்தை 383 ஆண்டு களாக வரையறுத்துக் குறிப்பிட்டிருக்கலாம். 'சென்னை 383' என்பது அதன் வரலாற் றின் அளவுகோல் அல்ல. பிரிட்டிஷா ரின் வருகைக்குப் பிறகு உருவான நகரத் தின் வயது.

நகரங்களுக்கு பிறந்தநாளை ஏற்ப டுத்தி அதையொட்டி கொண்டாட்டங் களை முன்னெடுப்பதற்கு பின்னால் மிகப் பெரிய வணிகம் இருக்கிறது. உலகிலுள்ள எல்லா பெரிய நகரங்களும் தங்களுக்கென்று சில அடையாளங்களை முன்னிறுத்தி சுற்றுலாப் பயணிகளைக் கவருவது வழக்கமாகவே இருந்து வரு கிறது.

'தி நியூ பிக் ஆப்பிள்' என்று நியூயார்க் நகரத்தை வர்ணித்து ஆப்பிள் இலச்சினையுடன் பொருள்களை சுற்று லாப் பயணிகளுக்கு விற்பனை செய்வ தும், ஈஃபிள் கோபுரத்தை அடையாள மாக்கி பாரிஸ் நகரம் கொண்டாடப்படு வதும், லண்டன் பாலத்தை முன்னிறுத்தி முன்னெடுக்கப்படும் விளம்பரங்களும் அந்த ரகத்தைச் சேர்ந்தவை.

அந்த மேலை நாட்டு பாணியைப் பின்பற்றும் வகையில்தான் இப்போது இந்தியாவிலும் நகரங்களுக்குப் பிறந்த நாள் கொண்டாடுவதை முனைப்புடன் வணிகர்கள் முன்னெடுக்கிறார்கள் ஊட கங்கள் அதற்கு உறுதுணையாக இருக் கின்றன.

எப்படியிருந்தாலும், 'சென்னை 383' கொண்டாடப்படும் வேளையில், கடந்த 383 ஆண்டு கால வரலாறு குறித்த சிந் தனை எழாமல் இல்லை. அன்றைய சென்னையும், இன்றைய சென்னையும் முற்றிலும் மாறு பட்டவை.

இந்த அளவு மக்கள்தொகையோ, விரிவாக்கமோ ஏற்படாத அன்றைய சென்னை, பெரும் பாலும் தெலுங்கு பேசும் ஆந்திர மக்கள் வாழ்ந்த நகரமாக இருந்தது என்பதுதான் வரலாறு உணர்த்தும் உண்மை.

பிரிட்டிஷ் கிழக் கிந்திய கம்பெனியின் தலைமையகமாக சென்னை அமைந் ததும், புனித ஜார்ஜ் கோட்டை கட்டப்பட் டதும், பிரிட்டிஷார் வாழும் ஜார்ஜ் டவுன் பகுதி ஏற்படுத்தப்பட்டதும் புதிய சென்னையின் உருவாக்கத்துக்கு அடித்தளமிட்டன. தொடர்ந்து பல்வேறு பாளையக்காரர்களையும், ஆற்காடு நவாபையும் கைவசப்படுத்தி பிரிட்டிஷார் உருவாக்கிய மதராஸ் ராஜதானியின் தலைமைப் பீடமாக மெட்ராஸ் உயர்ந்தது. விடுதலைக்குப் பிறகு மதராஸ் ராஜதானி, ஆந்திர பிரதேசம், மெட்ராஸ், மைசூர், கேரளம் என்று பிரிந்து, அதன் பிறகு மெட்ராஸ் மாகாணம் தமிழ்நாடாகவும், மெட்ராஸ் சென்னையாகவும் உருமாற்றம் பெற்றதெல்லாம் வரலாற்றின் சுவடுகள்.

சென்னையின் சாலைகள் மேம்பட் டிருக்கின்றன. புறநகர்ப் பகுதிகள் உருவாகி சென்னை மாநகரம் பரந்து விரிந்து இருக்கிறது. மாநகரத்தின் எல்லாப் பகுதிகளையும் இணைக்கும் விதத்தில் பேருந்து வசதிகளும், புறநகர் ரயில் வசதிகளும், மெட்ரோ ரயில் வசதியும் இருக்கின்றன. இந்தியாவின் மருத்துவத் தலைநகரமாகவும், கல்விச் சாலைகளின் கேந்திரமாகவும் சென்னை உயர்ந்திருக்கிறது. ஏனைய இந்திய மாநகரங்களுடன் ஒப்பிடும்போது வீட்டு வாடகையாக இருந்தாலும், வாழ்வினச் செலவுகளாக இருந்தாலும் சென்னையில் குறைவாகவே இருக்கிறது.

பொழுதுபோக்கு அம்சம் என்று எடுத்துக்கொண்டால், அன்றைய சென்னையில் மெரீனா கடற்கரை மட்டுமே இருந்தது. இன்று அனைத்துப் பகுதிகளிலும் பூங்காக்களும், திரும்பும் இடங்களிலெல்லாம் வணிக வளாகங் களும், ஆங்காங்கே மால்களும், புற்றீசல் போல உணவகங்களும் பெருகிட்ட சென்னையைப் பார்க்க முடிகிறது.

இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலத்தவரும் வாழும் நகரமாக மட்டுமல்லாமல், வெளிநாட்டவரும் கூட வாழ்கின்ற மாநகரமாக மாறியிருக் கிறது சென்னை என்பதை மறுப்பதற் கில்லை. சர்வதேச வரைபடத்தில் இந்தியா கலாசார தலைநகராக அங்கீகரிக்கப்பட்டிருப்பதையும் குறிப்பிட வேண்டும்.

இயற்கையாகவே வெள்ளம் வழிந் தோடும்படியான நகரமைப்பு வங்கக் கடலையொட்டியுள்ள சென்னைக்கு உண்டு. சென்னை மாநகரில் கூவம், அடையாறு என்று இரண்டு ஆறுகளும், பக்கிம்ஹாம் உள்ளிட்ட 16 கால்வாய் களும் திட்டமிட்டு நிறுவப்பட்டி ருக்கின்றன. இருந்தும்கூட பெருமழை பெய்தால் சென்னை மாநகரம் தண் ணீரில் மிதக்கும் அவலம் தொடர்கி றது.

வீதிதோறும் விதிமீறல் கட்டடங் களும், சாலைதோறும் ஆக்கிரமிப்பு களும் என்று ஒரு மாநகரம் எப்படி இருக்கக் கூடாதோ அப்படிப்பட்ட நிலையில் சென்னை இப்போது இருக்கிறது. சென்னை மாநகரின் பிறந்தநாள் கொண்டாட்டங்கள் வணிக ரீதியான ஆதாயத்துக்கு மட்டுமல்லா மல், சர்வதேச தரத்திலான மாநகரமாக சென்னையை மாற்றும் முனைப்பை முன்னெடுக்கவும் உதவுமானால், பிறந்தநாள் கொண்டாடி மகிழலாம்!

# பயங்கரமான நம்பிக்கைத் துரோகம்



கலாநிதி ஜெகான் பெரேரா

இவ்வருட ஆரம்பத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை திருத்தியமைத்தது. அந்த சட்டம் சர்வதேச நியமங்களை மீறுவதாக அமைந்திருந்தது என்பதை ஏற்றுக்கொண்ட அந்த அரசாங்கம் மனித உரிமைகள் நிலைவரத்தை மேம்படுத்துவதில் பற்றுறுதி கொண்டதாக தன்னைக் காட்டிக்கொள்ள விரும்பியது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மற்றும் ஏனைய சர்வதேச அமைப்புக்களிடம் இருந்து வருகின்ற நெருக்குதல்களை தணிப்பதற்கு ஏதுவாக களம் அமைக்கப்பட்டது. ஆனால், அரசாங்கத்தின் திட்டங்கள் இப்போது திசைமாறிச் செல்வது போன்று தெரிகிறது.

பல்கலைக்கழக மாணவர்கள் சம்மேளனத்தின் அமைப்பாளர் வசந்த முதலிகே மற்றும் இருவருக்கு எதிரான தடுப்புக்காவல் உத்தரவுகளில் கைச்சாத்திடவேண்டாம் என்று மனிதஉரிமைகள் பாதுகாவலர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் விசேட அறிக்கையாளர் ( UN Special Rapporteur on Human Rights Defenders) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் விடுத்த வேண்டுகோள் இதைப் பியதிபலிக்கிறது." அவர்களின் தடுப்புக்காவல் உத்தரவில் கைச்சாத்திடவேண்டாம் என்று ஜனாதிபதி ரணிலிடம் நான் கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு கைச்சாத்திட்டால் இலங்கைக்கு அது கரிநாளாக இருக்கும் " என்று அவர் கூறினார். தடுப்புக்காவல் உத்தரவுகள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வழங்கப்படுவதே இதில் உள்ள முக்கியத்துவமாகும்.

தற்போது அரசாங்கத்தின் ஒரு உறுப்பினராக இல்லாத முன்னாள் வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இந்த பயங்கரவாத தடைச்சட்ட தவறான பயன்பாடு குறித்து கவலை வெளியிட்டிருக்கிறார். சட்டம் பயங்கரவாதிகளைக் கையாளுவதற்கானது என்பதை அதன் பெயரே குறித்து நிற்கிறது. நியாயபூர்வமான ஜனநாயக நடவடிக்கையை பயங்கரவாதம் என்ற போர்வையின் கீழ் ஒடுக்கினால் அது கணிப்பிட முடியாத விளைவுகளைக் கொண்டுவரும் என்று பேராசிரியர் கூறியிருக்கிறார்.

"பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு அவசரமான திருத்தங்களை பாராளுமன்றத்தில் நான் சமர்ப்பித்து நிறைவேற்றச்செய்தபோது விரிவான மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு புதிய சட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும் வரை அது பயன்படுத்தப்பட மாட்டாது என்பதே தெளிவான புரிந்துணர்வாக இருந்தது" என்று அவர் குறிப்பிட்டார். அவசரகாலநிலைப் பிரகடனத்தை காலாவதியாக அனுமதித்துவிட்டு அதற்கு பதிலாக பயங்கரவாத தடைச்சட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்துவது முரண்பாடானதும் தவறான நோக்குடனானதுமாகும் என்றும் பேராசிரியர் எச்சரித்தார். பயங்கரவாத தடைச்சட்டத்தை நிறுத்திவிடுவதாக உறுதியளித்துவிட்டு அரசாங்கம் அதை பயன்படுத்துவது மக்களின் நம்பிக்கையை அல்ல பகைமையையே அரசாங்கம் சம்பாதிக்க வழிசெய்யும்.

பயங்கரவாத தடைச்சட்டம் போன்ற கொடிய சட்டங்களும் சட்டம் என்ற வரையறைக்குள்தான் வருகின்றன என்ற போதிலும் கூட சட்டத்தின் ஆட்சிக்குள் செயற்படுவதாக நியாயம் கற்பித்துக்கொண்டு போராட்ட இயக்கத்தை ஒடுக்குவதே அரசாங்கத்தின் கொள்கையாக தோன்றுகிறது. ஒரு அரசாங்க சார்பற்ற தன்னார்வ நிறுவனமான நிலம் மற்றும் விவசாய சீர்திருத்தத்துக்கான இயக்கத்தின் தலைவரான சிந்தக்க ராஜபக்ச அண்மையில் கைதுசெய்யப்பட்டிருக்கிறார். அவரது கைது தன்னார்வ நிறுவனங்களை அரசாங்கம் இலக்கு வைக்க ஆரம்பித்திருக்கிறது என்பதன் அறிகுறியாகும்.

அரசாங்க சார்பற்ற தேசிய தன்னார்வ நிறுவனங்களின் செயலகத்தை வெளியுறவு அமைச்சின் செயற்களத்தில் இருந்து அரசாங்கம் ஏற்கெனவே பொதுப்பாதுகாப்பு அமைச்சுக்கு மாற்றியிருக்கிறது. இது சிவில் சமூகத்தின் செயற்பாட்டுக்கான வெளியை சுருக்கும் நோக்கிலான நடவடிக்கையாகும்.அரசாங்கம் சிவில் சமூகத்தின் மீது நம்பிக்கை இழப்பது அது மக்களிடம் இருந்து தூரவிலகுகிறது என்பதன் அறிகுறியாகும். இதனால் அரசியல் உறுதிப்பாடின்மையே ஏற்படும்.

### பழைய ஆட்சி

அரசாங்கத்தின் கடுமையான நடவடிக்கைகள் பழைய ஆட்சி மீண்டு எழுகிறது என்பதன் அறிகுறியாகும். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச விரைவில் நாடு திரும்புவதற்கு திட்டமிட்டிருக்கிறார். அரசாங்கத்தில் அமைச்சர்களாக நியமிக்கப்படவேண்டியவர்கள் என்று ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் பிரேரிக்கப்பட்டிருக்கும் பெயர்ப்பட்டியல் அண்மைய போராட்ட இயக்கத்தின் விளைவாக ஏற்பட்ட அரசியல் மாற்றத்தை கணக்கெடுக்காததாக இருக்கிறது.

அந்த பட்டியலில் உள்ளவர்கள் அரச கட்டிடங்கள் முற்றுகையிடப்படுவதற்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் எரிக்கப்படுவதற்கும் வழிவகுத்த படுமோசமான ஊழலுக்கும் அதிகார துஷ்பிரயோகத்துக்கும் எதிரான மக்கள் கிளர்ச்சியினால் பதவிகளில் இருந்து விரட்டப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அரசாங்கத் தரப்பில் பழைய முகங்கள் மீண்டும் வருவதுடன் சமாந்தரமாக போராட்ட இயக்கமும் மீண்டெழும். ஆனால் இத்தடவை ஜே.வி.பி.தலைமையில் தெளிவாக ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு போராட்ட இயக்கமாக அது அமையும்.

தங்களது அயலகத்தில் உள்ள துடிப்பான உறுப்பினர்களை எல்லாம் கூட்டிக்கொண்டு தன்னெழுச்சிப் போராட்டக்களத்துக்கு வந்த ஆரம்ப தலைவர்கள் குறைந்தபட்சம் தற்போதைக்கு வெளியில் தலைகாட்டாமல் அமைதியாக இருக்கிறார்கள். போராட்டத்தில் பங்கேற்று முன்னாள் ஜனாதிபதியின் பியர் குவளையை எடுத்தது, ஜனாதிபதியின் கதிரையில் இருந்தது போன்ற சிறிய சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களை கைதுசெய்யும் நடவடிக்கைகளில் அரசாங்கம் இறங்கியிருப்பதால் தாங்களும் கைதுசெய்யப்படுவதை இந்த ஆரம்ப தலைவர்கள் விரும்பவில்லை.

அவர்களில் சிலர் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தற்போது இருக்கின்ற அரசியல்வாதிகளில் நேர்த்தியான ஒருவராகவும் நகர்புற நாகரிக பாங்குடையவராகவும் மதிக்கிறார்கள். வீழ்ச்சியடைந்திருக்கும் பொருளாதாரத்தை மீட்டெடுத்து தங்கள் வாழ்வில் மீண்டும் மேம்பாட்டை ஏற்படுத்தக்கூடிய ஒருவராக ஜனாதிபதியை அவர்கள் நோக்குகிறார்கள்.



பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு அவசியமான சர்வதேச ஆதரவை பெறுவதாக ஒரு எண்ணத்தை அரசாங்கம் ஏற்படுத்துகிறது. சர்வதேச நாணய நிதியம் அடுத்த கட்ட அலுவலர் மட்ட பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவிருக்கிறது. நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கான இலங்கையின் முயற்சிக ளுக்கு தனது நாட்டின் முழுமையான ஆதரவும் ஒத்து ழைப்பும் கிடைக்கும் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் உறுதியளித் திருக்கிறார்.

ஜனாதிபதி விக்கிரமசிங்க ஜப்பானுக்கு விஜயம் செய்யவிருக்கிறார். இலங்கையின் சர்வதேச கடன்கள் மீளாய்வுசெய்யப்படக்கூடியதாக உதவிவழங்கும் நாடுகளின் சர்வதேச மகாநாடொன்றைக் கூட்டுவதற்கு ஜப்பானை விக்கிரமசிங்கவினால் இணங்க வைக்கக்கூடியதாக இருக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் அதனால் நாட்டு மக்களில் வசதி குறைந்த பிரிவினருக்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள் குறித்த கவலையை அரசாங்கம் வெளிக்காட்டியிருக்கிறது.

ஆனால் , பொதுமக்களைப் பொறுத்தவரை நிலைமை மேலும் மோசமாகிக்கொண்டு செல்வதையே காணக்கூடியதாக இருக்கிறது. விலைவாசியில் குறைப்புச் செய்வதற்கான அரசாங்கத்தின் முயற்சிகள் மின்கட்டணம் 75 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டமை, மண்ணெண்ணெய் விலை கிட்டத்தட்ட 400 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டமை போன்ற நடவடிக்கைகளினால் பயனற்றுப் போகிறது. இந்த கடுமையான அதிகரிப்புகள் நாட்டின் எஞ்சிய பொருளாதாரத்தின் மீது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் ஆபத்தைக் கொண்டிருக்கின்றன. நிலைவரம் தொடர்ந்தும் மோசமாகிக்கொண்டு போகுமேயானால் மீண்டும் போராட்டங்கள் மூளுவதற்கான சாத்தியம் இருக்கிறது.

முன்னைய அரசாங்கத்தினால் அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாக்கப்பட்டதாக கூறப்படுகின்றவர்களுக்கு நட்டஈட்டை வழங்கும் திட்டத்தை அரசாங்கம் முன்னெடுக்குமானால் ஆர்ப்பாட்டங்கள் கடும் வேகத்துடன் முன்னெடுக்கப்படலாம். அண்மைய தீவைப்புகளின்போது வீடுகளை இழந்த அரசாங்க உறுப்பினர்களுக்கு நட்டஈடு வழங்குவதாக ஜனாதிபதி விக்கிரமசிங்க உறுதியளித்திருக்கிறார். அந்த வீடுகளின் பெறுமதி அந்த உறுப்பினர்களின் பகிரங்கமாக தெரிந்த வருமான மூலங்களையும் விட அதிகமானது என்கிற போதிலும் ஈட்டஈட்டு உறுதிமொழி வழங்கப்பட்டிருக்கிறது.

### முட்டாளின் சொர்க்கம்

அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களை சாத்தியமானால் முளையிலேயே கிள்ளிவிடவும் அவசியமானால் அரச பாதுகாப்பு படைகளை கட்டவிழ்த்துவிடவும் தயாராயிருப்தாக ஜனாதிபதி விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் வெளிக்காட்டியிருக்கிறது.

கொழும்பு காலிமுகத்திடலில் பிரதான போராட்டகளத்தை பலவந்தமாக நிர்மூலம் செய்ததுடன் ஜனநாயக உரிமைகளின் அடிப்படையில் போராட்டங்களில் ஈடுபட்டவர்களையும் கைதுசெய்ததன் மூலம் போராட்ட இயக்கத்தை ஒடுக்குவதற்கு தயார் நிலையில் இருப்பதை ஏற்கெனவே அரசாங்கம் வெளிக்காட்டியிருக்கிறது. வெளிநாடுகளில் ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்தவர்களைக் கூட அரசாங்கம் கைது செய்கிறது.

பாரதூரமான மனிதாபிமான நெருக்கடி நாட்டில் நிலவுகின்ற போதிலும், வைத்தியசாலைகளில் மருந்துவகைகள் உட்பட நேரடியான சமூக நலன்புரி நோக்கங்களுக்கான வளங்களுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுகின்ற போதிலும் பாதுகாப்பு படைகளின் தேவைகளை நிறைவேற்ற பட்ஜெட்டில் அரசாங்கம் மீண்டும் முன்னுரிமை கொடுத்திருக்கிறது.

பாதுகாப்பு படைகளைப் பயன்படுத்தி போராட்ட இயக்கத்தை ஒடுக்குவதற்கும் அரசாங்கத்துக்கு எதிரான நிலைப்பாடுகளை எடுப்பவர்களை அச்சுறுத்துவதற்கும் மேற்கொள்ளப்படுகின்ற இந்த முயற்சிகள் இப்போது சர்வதேச ரீதியாக கண்டனத்துக்குள்ளாகின்றன. சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு போன்ற சர்வதேச மனித உரி மைகள் நிறுவனங்கள் அர சாங்கத்தை கடுமையாக கண் டனம் செய்திருக்கின்றன.

ஆனால், அரசாங்கமோ பழைய ஆட்சியை மீள நிறுவும் அதன் வெளிப்படையான பிரயத்தனத்தில் இந்த கண்டனங்களுக்கெல்லாம் காதுகொடுப்பதற்கான நாட்டத்தைக் காட்டவில்லை. ஆனால் இது தேசிய நலன்களுக்கு பாதகமானதாக அமையக் கூடும். ஆட்சிமுறையில் மனித உரிமைகள் நியமங்களைப் பின்பற்றி நடந்தால் இலங்கைக்கு தங்களது ஆதரவை வழங்க ஐ.நா. மனித உரிமைகள் பேரவையும் ஐரோப் பிய ஒன்றியமும் ( ஜி. எஸ்பி.பிளஸ் வரிச்சலுகை) முன்வந்திருக்கின்றன.

சர்வதேச மனித உரிமைகள் நிறுவனங்களின் ஆட்சேபங்களை அலட்சியம் செய்வதற்கு அரசாங்கம் தற்சமயம் தயாராயிருக்கிறது போன்று தெரிகிறது. இந்த சர்வதேச மனித உரிமைகள் நிறுவனங்கள் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகின்ற இலங்கையின் அரசியல் தலைமத்துவத்துக்கு எதிராக கடுமையான தடைகளை விதிப்பதற்கு ஆதரவைத் திரட்டுவதில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன.


இலங்கையின் துறைமுகம் ஒன்றுக்கு சீனப் போர்க்கப்பல் வந்தது தொடர்பிலான அண்மைய சர்ச்சை சர்வதேச கவனத்தை கணிசமானளவுக்கு பெற்றிருக்கிறது. சீனாவின் செல்வாக்கு வலயத்தின் ஒரு அங்கமாக இலங்கை வருவதை மேற்குலக நாடுகளும் ஜப்பானும் இந்தியாவும் விரும்பவில்லை.

சர்வதேச சமூகத்தின் கணிப்பீட்டில் மனித உரிமைகளை விடவும் புவிசார் அரசியலே முக்கியத்துவம் பெறும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் அரசாங்கம் செயற்படுகின்றது என்பதன் அறிகுறியே மனித உரிமைகள் தொடர்பில் சர்வதேச அமைப்புக்களினால் தெரிவிக்கப்படுகின்ற ஆட்சேபங்கள் பற்றிய அதன் அலட்சியமாகும்.அடுத்த மாத முற்பகுதியில் ஜெனீவாவில் ஆரம்பமாகவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் யார் முட்டாளின் சொர்க்கத்தில் வாழ்கிறார்கள் என்பதற்கான அறிகுறியைக் காட்டும்.

# புலமைச் சிகரம்


## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**18)** 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

**19)**  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

.............................................

**20)** தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , ............. , ...........   ii) 18 , 15 , 12 , ............. , ...........

**21)** 3, 9, 14, 6, 10, 12, — பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

......................................................................

**22)** ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

......................................................................................

**23)** ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

..................................................................

**24)** பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

..................................................................

**25)** 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..................................................

**26)** **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

**27)** கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.......................................................

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



......................................................

**29)** ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

......................................................   (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30)** சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)    2)    3) 

**31)** வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி   2) இரணைமடுக்குளம்   3) பராக்கிரமபாகு சமுத்திரம்

**32)** உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்   2) உதிப்பு   3) உடலைத் தளர்த்தல்

**33)** தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்   2) வாளேந்திய சிங்கம்   3) நெற்கதிர்

**34)** பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976   2) 1851   3) 1815

**35)** வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு   2) இறப்பர், தாழம்பூ   3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6   2) 8   **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130   2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745   **23.** 455
**24.** 1l 100ml / 1100ml   **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190   2) 100   3) 290
**27.** 15 : 30   **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1   **31.** 2   **32.** 3
**33.** 2   **34.** 3   **35.** 2

### கல்வி tv CHANNEL-1

**24.08.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி tv CHANNEL - 2

**24.08.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# அரசியல் ஆதாயத்தை தேடாமல் பயணித்தால் நாட்டை மீட்கலாம்

*ஸ்ரீ லங்கா ஜனநாயகக் கட்சி தலைவர் கூறுகிறார்*

அம்பாறை, ஓக. 24

**அரசியல் ஆதாயங்களை தேடாமல், சகலரும் ஒருமித்த எண்ணத்தில் பயணித்தால் மட்டுமே நாட்டை மீட்கலாம் என ஸ்ரீலங்கா ஜனநாயகக் கட்சியின் தலைவர் கலாநிதி அன்வர் எம் முஸ்தபா தெரிவித்தார்.**

காத்தான்குடியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட ஒன்றாகவே பார்க்க முடிகின்றது.

இந்த நிலையில் இருந்து நாட்டை மீட்க ஒற்றுமையான விட்டுக்கொடுப்பு நிறைந்த அரசியல் கலாசாரத்தால் தான் முடியுமென உறுதியாக தான் நம்புகின்றேன்.

ஜனாதிபதி ரணில், நாட்டை சரியான வழியில் கொண்டுசெல்லும் சந்தர்ப்பத்தில், நாட்டிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களும், உறுப்பினர்களும் சுய அரசியல் இலாபங்களை மறந்து செயற்படவேண்டும்.

மக்கள் படும் கஷ்டங்களை கவனத்தில் கொண்டு, மக்களுக்கான சர்வகட்சி அரசொன்றை அமைத்து, அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தி, வெளிநாட்டு முதலீடுகளையும், சர்வதேச நாணய நிதிய உதவிகளையும் பெற்று நாட்டை மீட்டெடுக்க முன்வர வேண்டும்.

இந்நேரம் அரசியல் செய்து கட்சியை பாதுகாப்பது குறித்தோ அல்லது வாக்கு வங்கி குறித்தோ சிந்தித்து செயற்படக் கூடாது. நாளைய தலைமுறைக்கு சகல வளமுமிக்க எமது நாட்டை எப்படி ஒழுங்காக கையளிப்பது என்பது பற்றி சிந்தித்து செயற்பட வேண்டும்-என்றார். (அ)



# மைதானத்தில் நாச வேலை

மட்டக்களப்பு, ஓக. 24

வாழைச்சேனைப் பகுதியில் இயங்கி வரும் அஸ்பக் அக்கடமியின் விளையாட்டு மைதானச் சுற்றுமதில் மேல் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த பந்து தடுப்புச் சீலை, இனந்தெரியாத நபர்களால் தீ வைக்கப்பட்டுள்ளது.

குறித்த விளையாட்டு மைதானத்தில் வீரர்கள் பயிற்சியில் ஈடுபடும்போது பந்து சுற்றுமதிலைத் தாண்டி வெளியில் செல்லாமல் தடுப்பதற்காக கடின சீலை பொருத்தப்பட்டிருந்தது.

அவ்வாறு பொருத்தப்பட்டிருந்த சீலைக்கு தீ வைக்கப்பட்டு அது முற்றாக எரிந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற் கொண்டுள்ளனர். (அ)

# காட்டு யானை தொல்லை அம்பாறையில் அதிகரிப்பு

அம்பாறை, ஓக. 24

அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனை சம்மாந்துறை நாவிதன்வெளி கல்முனை சாய்ந்தமருது காரைதீவு நிந்தவூர் பிரதேச செயலக பிரிவில் மீண்டும் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதாகவும் இதனை தடுப்பதுக்கு நடவடிக்கை எடுக்குமாறும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர், நாவிதன்வெளி, நற்பிட்டிமுனை, அஸ்ரப் நகர் ஆகிய பகுதிகளில் காட்டு யானைகளின் தொல்லை அதிகளவில் காணப்படுகின்றது. காட்டு யானைகளின் தொல்லையால் குறித்த கிராமங்களில் மக்கள் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ளனர்.

மாலை மற்றும் இரவு வேளைகளில் கிராமங்களுக்குள் உட்புகும் யானைகளினால் குடியிருப்பு பகுதி மற்றும் சிறுபோக நெற்செய்கை நிலங்கள் பெருமளவான பயன்தரும் மரங்களையும் பயிர்களையும் அழித்து வருகின்றன.

இந்தப் பகுதிகளில் காட்டு யானைகளைக் கட்டுப்படுத்த கடந்த காலங்களில் யானை வெடிகளை வனஜீவராசி திணைக்களம் பொதுமக்களுக்கு வழங்கி இருந்தது.

எனினும் யானைகளின் அச்சுறுத்தல் தொடர்ந்த வண்ணமே உள்ளதாக தெரிவிக்கப்படுவதுடன் யானைகளைக் கட்டுப்படுத்துவதுக்கு மாற்று வழியை ஏற்படுத்தித்தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ)

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 10 இந்திய மீனவர்கள் கைதாகினர்!

திருமலை, ஓக. 24

சர்வதேச கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 10 பேர் இந்திய இழுவை படகுகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீன்பிடி படகுகளைக் கண்காணிக்கும் நோக்கில் முல்லைத்தீவு கடற்பரப்பில் நேற்று மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போதே இலங்கை கடற்படையினர் இவர்களை கைது செய்துள்ளனர்.

வெளிநாட்டு மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளினால் உள்ளூர் மீனவர் சமூகத்துக்கு ஏற்படும் பாதிப்பையும், கடல்சார் சூழலின் பல்லுயிர் சேதத்தையும் கட்டுப்படுத்தும் நோக்கில் கடற்படையினர் தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதன்படி, நேற்று முன்தினம் கிழக்கு கடற்படை கட்டளைக்கு உட்பட்ட நான்காவது விரைவுத் தாக்குதல் படையணிக்கு சொந்தமான விரைவுத் தாக்குதல் கப்பலொன்று, நாட்டுக் கடற்பரப்புக்குள் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த இந்திய மீன்பிடிக் கப்பல்களை கண்காணிக்கும் விசேட நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டது.

இதன்போதே இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந் திய மீனவர்கள் 10 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் திருகோணமலை துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக திருகோணமலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (அ)

# நிந்தவூரில் கடல் அரிப்பைத் தடுக்க அதிகாரிகளுடன் உயர்மட்ட கூட்டம்

அம்பாறை, ஓக. 24



நிந்தவூர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடல் அரிப்பை தடுப்பதற்கான அதிகாரிகளுடனான உயர்மட்டக் கூட்டம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.எம். தாஹிர் தலைமையில் நிந்தவூர் பிரதேச சபையில் இடம் பெற்றது.

இந்த கூட்டத்தில் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ அப்துல் லத்தீப், கரையோர வளம் பேணல் பாதுகாப்பு திணைக்கள பிரதம பொறியியலாளர், மற்றும் நிந்தவூர் பிரதேச சபை உப தவிசாளர் வை.எல்.சுலைமாலெப்பை, நிந்தவூர் பிரதேச சபையின் உறுப்பினர்கள், நிந்தவூர் அனர்த்த முகாமைத்துவ அணியின் செயலாளர் எம் எஸ் எம் நிப்றாஸ் மற்றும் அதன் பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது கடலரிப்பை தற்காலிகமாக தடுப்பதற்காக முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத் திட்டங்கள் குறித்து கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்தின் பொறியியலாளர் விளக்கமளித்தார்.

அத்துடன் இக்கடலரிப்பிற்கு உள்ளாகும் பிரதேசங்களையும் அங்குள்ள மக்களின் வாழ்வாதார தொழில் முயற்சிகளையும் மேலும் அழிவடையாத வண்ணம் பாதுகாத்து மீளக் கட்டி எழுப்ப வேண்டியதன் அவசியத்தை நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.எம்.தாகிர் அதிகாரிகளின் கவனத்திற்கு எடுத்துரைத்தார்.

அத்துடன் இந்த கடல் அரிப்பை தடுப்பதற்காக தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் தற்காலிக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான எரிபொருள் மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்கு தேவையான நிதியை பிரதேச சபை நிதியிலிருந்து வழங்குவதாகவும் இதனைக் கொண்டு வேலைகளை துரிதப்படுத்துமாறும் நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.எம்.தாஹிர் பொறியியலாளரை கேட்டுக்கொண்டார்.

மேலும் நிரந்தர தீர்வை நோக்கிய கலந்துரையாடலில் அதற்கான முன்னெடுப்புகள் மற்றும் செயற்பாடுகளை பொறியியலாளர் விளக்கிய போது கடலில் நீரோட்டதுக்கு குறுக்காக கிழக்கு மேற்காக கற்கள் இடும் பணியை நிந்தவூர் பிரதேச சபையின் உதவி தவிசாளர் வை.எல்.சுலைமாலெப்பை உரிய அமைச்சரோடு தொடர்புகொண்டு முன்னெடுப்பதாகவும் தெரிவித்தார். (அ)

# வீட்டுத்தோட்ட விவசாயிகளுக்கு மரக்கறி விதைகள் விநியோகம்

மட்டக்களப்பு, ஓக. 24



உணவுப் பஞ்சத்தை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் வகையில், உப உணவுப் பயிர் உற்பத்தியைப் பெருக்குவதற்காக, வீட்டுத்தோட்ட விவசாயிகளுக்கு குறிப்பாகப் பெண்களுக்கு மரக்கறிப் பயிர் நாற்றுக்களும் பழ மரக்கன்றுகளும் விநியோகம் செய்யப்பட்டு வருவதாக ஏறாவூர் நகர விவசாய விரிவாக்கல் பிரிவின் போதனாசிரியை எம்.எச். முர்ஷிதா ஷிரீன் தெரிவித்தார்.

ஏறாவூர் நகர பிரதேசத்திலுள்ள கலையாற்றல் மிக்க பல்துறைக் கலைஞர்களுக்கு கத்தரி மற்றும் மிளகாய் நாற்றுக்களை வழங்கும் நிகழ்வு, ஏறாவூர் நகரில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

அங்கு நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய விவசாயப் போதனாசிரியை முர்ஷிதா ஷிரீன், "போதியளவு நிலப்பரப்புக் குறைவாக இருக்கின்ற இடங்களிலும் கூட பயிர்களை நாட்டி நாளாந்த வீட்டுக்குத் தேவையான மரக்கறிகளை இலைக்கறிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதன்மூலம் நமக்குத் தேவையான போஷணையையும் பெற்றுக் கொண்டு, நோய் நொடியற்று ஆரோக்கியமாக வாழ முடியும். பயிர்களுக்குத் தேவையான இயற்கைப் பசளைகளையும் நாமே வீட்டில் நாளாந்தம் சேரும் கழிவுகளைக் கொண்டு தயாரித்துக் கொள்ள முடியும்.

எனவே, இத்தகைய முன்மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு பெண்களும் உணவு உற்பத்திக்காக நமக்குத் தேவையான உணவுப் பொருட்களை நாமே உற்பத்தி செய்து தன்னிறைவு அடைய வேண்டும்-என்றார். (அ)

# அமெரிக்காவுடன் தொடர்ந்து இணைந்து செயல்படுவோம்!

## தாய்வான் ஜனாதிபதி அறிவிப்பு

தாய்பேய் சிற்றி,ஓக.24

**தாய்வான் தனது பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காக அமெரிக்காவுடன் தொடர்ந்து இணைந்து செயற்படும் என தாய்வானிய ஜனாதிபதி சாய் இங்-வென் தெரிவித்துள்ளார்.**

ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தில் இருந்து வருகை தந்த குழுவிடம் நேற்று செவ்வாய்க்கிழமை பேசும் போதே அவர் இவ்வாறு கூறினார்.



தாய்வான் சர்வாதிகார ஆக்கிரமிப்பு முயற்சிகளை தொடர்ந்து எதிர்கொண்டு வருகிறது. இதனை எதிர்கொள்ள நாங்கள் எங்கள் பாதுகாப்பை தொடர்ந்து மேம்படுத்துகிறோம். இதற்காக அமெரிக்காவுடன் தொடர்ந்து பணியாற்றுவோம் எனவும் தாய்வான் ஜனாதிபதி சாய் இங்-வென் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை,சீனாவின் கடும் எதிர்ப்பை மீறி அமெரிக்க சபாநாயகர் நான்சி பெலோசியும், அவரை தொடர்ந்து 5 அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களும் அடுத்தடுத்து தாய்வானுக்கு பயணம் மேற்கொண்டதால் சீனா-தைவான் இடையே பதற்றம் நிலவுகிறது.

இந்நிலையில் அமெரிக்காவின் இண்டியானா மாகாணத்தின் ஆளுநர் எரிக் ஹோல்காம்ப் 4 நாள் பயணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை தாய்வான் சென்றுள்ளார். அங்கு அவர் 4 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. (அ)

# ரஷ்யாவுக்கு எதிரான போரில் 9,000 உக்ரைன் படையினர் பலி!

கீவ், ஓக. 24

ரஷ்யாவுடனான போரில் ஏறக்குறைய 9,000 உக்ரைன் இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாக உக்ரைன் ஆயுதப்படைகளின் தலைவர் ஜெனரல் வலேரி ஜலுஷ்னி தெரிவித்தார்.



போரில் கொல்லப்பட்ட உக்ரைன் இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரை கௌரவிக்கும் மாநாட்டில் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பெப்ரவரி 24 உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு தொடங்கிய பின்னர் உக்ரைன் இராணுவத்தின் இழப்பு குறித்து இராணுவ உயர் மட்ட அதிகாரி ஒருவர் வெளியிட்ட முதல் உத்தியோகபூர்வ தகவலாக இது அமைந்துள்ளது.

இதேவேளை, உயிரிழந்த இராணுவத்தினரின் எண்ணிக்கையில் எல்லைக் காவலர்கள் உள்ளிட்ட அனைத்து வீரர்களும் அடங்குகின்றனரா? இல்லையா? என்பது குறித்த தகவல் தெரிவிக்கப்படவில்லை.

இந்த மாநாட்டில் பேசிய உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, சுமார் 1 மில்லியன் மக்கள் உக்ரைன் ஆயுதப் படைகளுடன் இணைந்து ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு போரை எதிர்கொண்டு உக்ரைனைப் பாதுகாப்பதாகக் கூறினார். (அ)

# கொரோனா தொற்று நெருக்கடியால் சீனாவில் பிறப்புவீதம் கடும் வீழ்ச்சி!

பீஜிங், ஓக. 24

கொரோனா வைரஸ் தொற்று நோய் நெருக்கடி காரணமாக சீனாவில் திருமணம் மற்றும் பிறப்பு விகிதங்கள் குறைந்து வருவதாக சீன தேசிய சுகாதார ஆணையம் தெரிவித்துள்ளது.



சமீபத்திய ஆண்டுகளில் கல்விச் செலவுகள் மற்றும் குழந்தை வளர்ப்புக்கான அதிக செலவீனங்கள் காரணமாக பெற்றோர் குழந்தைப் பிறப்பை தள்ளிப்போடுகின்றனர். அல்லது ஒரு குழந்தையை மட்டுமே பெற்றுக் கொள் கின்றனர். மேலும் திருமணங்களையும் தள்ளிப்போடுவது தெரியவந்துள்ளதாக வும் சீனாவின் தேசிய சுகாதார ஆணையம் குறிப்பிட்டுள்ளது.

இளைஞர்கள் நகர்ப்புறங்களுக்கு இடம்பெயர்வது, கல்விக்காக அதிக நேரம் செலவிடுவது மற்றும் வேலையில் அதிக அழுத்தம் ஆகியனவும் குழந்தைகள் பிறப்பு வீதம், மற்றும் திருமணங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடுமையான கட்டுப்பாடுகளுடன் எந்தவொரு தொற்றுநோய் பகுதியையும் உடனடியாக முடக்கும் வகையிலான சீனாவின் சமரசமற்ற பூச்சிய கோவிட் கொள்கையானது குழந்தைகளைப் பெறுவதற்கான சீனர்களின் விருப்பத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக மக்கள் தொகை ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

சீனாவில் புதிய பிறப்புகள் இந்த ஆண்டு பெரிய அளவில் வீழ்ச்சியடையும் என்று மக்கள்தொகை ஆய்வாளர்கள் கூறுகின்றனர். கடந்த ஆண்டு 10.6 மில்லியன் குழந்தைகளுடன் ஒப்பிடும்போது இவ்வாண்டு பிறப்பு 10 மில்லியனுக்கும் கீழே குறையும் என்று கணிப்புகள் கூறுகின்றன. இது 2020 ஐ விட 11.5 வீதம் குறைவாகும்.

2021 ஆம் ஆண்டில் சீனாவின் கருவுறுதல் விகிதம் 1.16 ஆக இருந்தது. இது உலகின் மிகக் குறைந்த விகிதங்களில் ஒன்றாகும். மேலும் நிலையான மக்கள் தொகையைப் பேணுவதற்கு அவசியமான 2.1 விகிதத்திற்குக் கீழே உள்ளது.

1980 முதல் 2015 வரை ஒரு குழந்தை கொள்கையை சீனா திணித்தது. இதனால் அதன் மக்கள் தொகை சுருங்கி வருவதை சீன அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இது ஒரு நெருக்கடியாக மாறியுள்ளது.

இதனையடுத்து பிறப்பு வீதத்தை ஊக்குவிக்கும் நோக்கில் சீன அரசு ஒரு குழந்தைக் கொள்கையை நீக்கியது. அத்துடன் குழந்தைகள் பெற்றுக் கொள்வதை ஊக்குவிக்கும் நோக்கில் பல்வேறு சலுகைகளை அறிவித்துள்ளது. வரிச் சலுகைகள், நீண்ட மகப்பேறு விடுப்பு, மருத்துவக் காப்பீடு, வீட்டு மானியங்கள் மற்றும் மூன்றாவது குழந்தைக்கு கூடுதல் பணம் போன்ற நடவடிக்கைகளை சீன அரசாங்கம் அறிமுகப்படுத்தியமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# பின்லாந்து பிரதமர் சன்னா மரின் போதைப்பொருளை பாவித்தாரா?

ஹெல்சிங்கி, ஓக. 24

பின்லாந்து பிரதமருக்கு நடத்தப்பட்ட போதை மருந்துச் சோதனையில் முடிவுகளின் அடிப்படையில் அவர் போதைமருந்து பயன்படுத்தவில்லை என்பது தெரியவந்தது.



பின்லாந்து பிரதமராக 36 வயது பெண்ணான சன்னா மரின் பதவி வகித்து வருகிறார். கடந்த 2019ஆம் ஆண்டு தனது 34 வயதில் பின்லாந்தின் பிரதமராக பதவியேற்றதன் மூலம் உலகின் இளம் வயது பிரதமர் என்கிற பெருமையை அவர் பெற்றவர்.

இந்த நிலையில் சன்னா மரின் நண்பர்களுடன் இணைந்து உற்சாகமாக பாடி, நடனம் ஆடும் வீடியோ சமூக வலைத்தளங்களில் பரவி பெரும் சர்ச்சையை கிளப்பியது. வீடியோவை பார்த்த பலரும் சன்னா மரின் போதைப் பொருளை உட்கொண்டு நண்பர்களுடன் குத்தாட்டம் போட்டதாக குற்றம் சாட்டி கடுமையாக விமர்சனம் செய்தனர்.

நாட்டு மக்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டிய பிரதமரே இவ்வாறு நடந்து கொள்வதா? என எதிர்க்கட்சிகள் சாடின. சன்னா மரின் போதைப்பொருளை பயன்படுத்தினரா? என பரிசோதனை நடத்த வேண்டும் எனவும், பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்ட அவர் பதவி விலக வேண்டும் எனவும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின.

இந்த சர்ச்சையால் சன்னா மரினின் பிரதமர் பதவிக்கும், ஆளும் டெமோக்ரடிக் அரசுக்கும் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

எனினும் விமர்சனங்களுக்கு பதிலளித்து பிரதமர் சன்னா மரின் தான் எந்த போதைப்பொருளையும் பயன்படுத்தவில்லை என்றும் சட்டத்துக்கு புறம்பாக எதையும் செய்யவில்லை என்றும் விளக்கமளித்தார்.

போதைப்பொருள் தொடர்பாக பரிசோதனை நடத்துவதில் எனக்கு எந்த பிரச்னையும் இல்லை. அதேபோல் எனது நடத்தையை மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். இப்போது இருப்பது போலவே இருக்க விரும்புகிறேன். அது ஏற்றுக்கொள்ளப்படும் என்று நம்புகிறேன் எனவும் அவர் கூறினார்.

என் வாழ்நாளில், என் இளமை பருவத்தில் கூட, நான் போதைப் பொருள் பயன்படுத்தியதில்லை எனக் குறிப்பிட்ட பிரதமர் சன்னா மரின், போதை மருந்து சோதனைக்கு தானாகவே முன்வந்தார்.

அவருக்கு ஒகஸ்ட் 19 இல் போதை மருந்துச் சோதனை நடத்தப்பட்டது. இந்த முடிவின் அடிப்படையில் சன்னா மரினின் அரசியல் எதிர்காலம் அமையும் என்று அரசியல் நோக்கர்கள் தெரிவித்தனர்.

சன்னா மரினுடைய சிறுநீர் மாதிரி சேகரிக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டது. இந்த நிலையில், போதை மருந்துச் சோதனை முடிவுகள் நேற்று முன் தினம் வெளியிடப்பட்டன. இதில் அவர் போதை மருந்து பயன்படுத்தவில்லை என்பது தெரியவந்தது.

முன்னதாக கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் கொரோனா தொற்று விதிமுறைகளை மீறி சன்னா மரின் இரவு கேளிக்கை விடுதிக்கு சென்றது சர்ச்சையை ஏற்படுத்தியது. இதற்காக அவர் மன்னிப்பு கோரியதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# கனடாவிலிருந்து ஐரோப்பாவுக்கு திரவ எரிவாயு ஏற்றுமதியாகலாம்?

ஒட்டாவா, ஓக. 24

கனடாவில் இருந்து ஐரோப்பாவுக்கு நேரடியாக திரவ இயற்கை எரிவாயுவை ஏற்றுமதி செய்வதற்கான வழிகளை ஆராய்ந்து வருவதாக பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடே தெரிவித்தார்.

ஜேர்மனி ஆட்சித் தலைவர் ஓலாஃப் ஸ்கோல்ஸ் கனடாவுக்கு விஜயம் செய்துள்ளார். அவரை கியூபெக் - மொன்றியலில் ட்ரூடே சந்தித்துப் பேசினார். தொடர்ந்து இடம்பெற்ற கூட்டுச் செய்தியாளர் சந்திப்பின்போதே ட்ரூடோ இவ்வாறு தெரிவித்தார்.

குறுகிய காலத்தில் திறன்களை அதிகரிப்பதன் மூலம் உலகளாவிய வலுசக்தி விநியோகத்திற்கு பங்களிக்க எங்களால் முடிந்ததை நாங்கள் செய்வோம் என்றும் ட்ரூடோ கூறினார்.

கனடா கிழக்கு கடற்கரையில் இருந்து ஐரோப்பாவுக்கு திரவ எரிவாறு உட்பட வலுசக்தி மூலங்களை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் குறித்து நாங்கள் தொடர்ந்து ஆராய்வோம். அதற்கான முயற்சியில் தீவிரமாக ஈடுபடுவோம்.

அத்துடன், கனடா மற்றும் ஜேர்மனியில் உள்ள வணிக நிறுவனங்களுக்கு இடையே பொருளாதார ஈடுபாடு தொடர்பான பேச்சு நடந்து வருகின்றன எனவும் கனடா பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ செய்தியாளர்களிடம் கூறினார். (அ)

# சின்சினாட்டி ரென்னிஸ்; கார்சியா சாதனை வெற்றி!



சின்சினாட்டி, ஓக. 24

சின்சினாட்டி ரென்னிஸ் போட்டியில் தகுதிகாண் சுற்றின் மூலம் பிரதான சுற்றுக்கு முன்னேறி சம்பியனான முதலாவது வீராங்கனை என்ற வரலாற்று சாதனையை 28 வயதான கார்சியா நிலைநாட்டினார்.

பெண்களுக்கான ரென்னிஸ் தரவரிசையில் 21ஆம் இடத்திலுள்ள செக் குடியரசு வீராங்கனை பெட்ரா குவிட்டோவாவை 2 நேர் செற்களில் வெற்றி கொண்டே கார்சியா சம்பியன் பட்டத்தை சுவீகரித்தார்.

முதலாவது செற்றில் 6 - 2 என்ற புள்ளிகள் அடிப்படையில் இலகுவாக வெற்றிபெற்ற கார்சியா, 2ஆவது செற்றில் சிறு சவாலுக்கு மத்தியில் 6 - 4 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றார்.

ஐந்து வருடங்களுக்கு முன்னர் வுஹான் மற்றும் பீஜிங் ரென்னிஸ் போட்டிகளில் அடுத்தடுத்து சம்பியனான பின்னர் கார்சியா வென்றெத்த மூன்றாவது மாஸ்டர்ஸ் கிண்ணம் இதுவாகும்.

தகுதிகாண் சுற்றில் வெற்றிபெற்று பிரதான சுற்றில் நுழைந்த கார்சியா, தரவரிசையில் 10ஆம் இடத்துக்குள் இருந்த மரியா சக்காரி, அரினா சபலென்கா, ஜெசிக்கா பியூலா ஆகியோரை வெற்றிகொண்டிருந்தார்.

உலக மகளிர் ரென்னிஸ் தரவரிசையில் தற்போது 35ஆம் இடத்தில் இருக்கும் கார்சியா, 2017இற்குப் பின்னர் முதல் தடவையாக முதல் 20 வீராங்கனைகளுக்குள் இடம்பிடிக்கவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இந்தியாவுக்கு எதிரான போட்டி போராடித் தோற்றது சிம்பாவே!




ஹராரே, ஓக. 24

மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டியில் இந்திய அணியை வெல்ல வேண்டும் என இறுதி வரை போராடியது சிம்பாவே அணி. அந்த அணியின் துடுப்பாட்டவீரர் சிக்கந்தர் ரஸா சதம் விளாசி இருந்தார். இருப்பினும் வெற்றிக் கோட்டை நெருங்கிய அந்த அணியால் அதனை கடக்க முடிய வில்லை. இதனால் இந்தியா 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்த போட்டியில் வெற்றி பெற்றது.

கே. எல். ராகுல் தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி சிம்பாவேயில் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது. இந்த தொடரின் முதல் இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்று 2-0 என்ற கணக்கில் இந்தியா தொடரையும் கைப்பற்றியது. இந்நிலையில், மூன்றாவது போட்டி நேற்று முன்தினம் ஹராரே கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்கள் முடிவில் 289 ஓட்டங்கள் எடுத்தது.

290 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை விரட்டியது சிம்பாவே. 6 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார் இன்னசென்ட் கயா. இருப்பினும் சியன் வில்லியம்ஸ் இனிங்க்ஸை ஸ்திரப்படுத்தினார். கைரானோவுடன் 34 ஓட்டங்கள் மற்றும் முன்யோங்காவுடன் 41 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தார் அவர். இருந்தாலும் 45 ஓட்டங்களில் விக்கெட்டை இழந்தார்.

அவர் விட்டுச் சென்ற பணியை அடுத்ததாகத் துடுப்பெடுத்தாட வந்த சிக்கந்தர் ரஸா கவனித்துக் கொண்டார். ஒரு பக்கம் சீரான இடைவெளியில் சிம்பாவே விக்கெட்களை இழந்தது. எட்டாவது விக்கெட்டுக்காக பிராட் எவன்ஸ் உடன் இணைந்து 104 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தார் ரஸா. 88 பந்துகளில் சதம் விளாசினார் அவர்.

அப்போது எவன்ஸ், 28 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து 115 ஓட்டங்கள் எடுத்து ரஸா ஆட்டமிழந்தார். 49.3 ஓவர்களில் அந்த அணி அனைத்து விக்கெட்களை இழந்து வெறும் 276 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் இந்திய அணி வென்றது.

முன்னதாக, இந்த போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி துடுப்பாடுத்தாடியது. தொடக்க ஆட்டக்காரர்களாக அணித் தலைவர் கே. எல். ராகுல் மற்றும் ஷிகர் தவான் களம் இறங்கினர்.

இருவரும் இணைந்து முதல் விக்கெட்டுக்கு 63 ஓட்டங்கள் சேர்த்தனர். ராகுல், 30 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து தவானும் 40 ஓட்டங்கள் எடுத்து விக்கெட்டை இழந்தார்.

பின்னர் கில் மற்றும் இஷான் கிஷன் இணைந்து 140 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டத்தை ஏற்படுத்தினர். இந்திய அணிக்கு அது மிகவும் முக்கியமான இணைப்பாட்டமாக அமைந்தது. கிஷன், 50 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். ஹூடாவும் வந்த வேகத்தில் பெவிலியன் திரும்பினார்.

மறுமுனையில் பொறுப்புடன் விளையாடிய கில், ஒருநாள் கிரிக்கெட்டில் தனது முதல் சதத்தை பதிவு செய்தார். இறுதி ஓவரின் முதல் பந்து வரை அவர் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார். 97 பந்துகளில் 130 ஓட்டங்கள் குவித்திருந்தார். இதில் 15 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸர் அடங்கும்.

சஞ்சு சாம்சன், அக்சர் பட்டேல், தாக்கூர் போன்றவர்கள் மிக விரைவில் தங்கள் விக்கெட்களை இழந்தனர். 50 ஓவர்கள் முடிவில் இந்திய அணி 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 289 ஓட்டங்களை எடுத்தது.

சிம்பாவே அணிக்காக பிராட் எவன்ஸ் சிறப்பாக பந்து வீசி இருந்தார். 10 ஓவர்கள் வீசி 5 விக்கெட்களை கைப்பற்றி இருந்தார் அவர்.

# ஆசியக் கிண்ணத் தொடர் விலகினார் துஷமந்த சாமீர




கொழும்பு, ஓக. 24

ஆசியக் கிண்ணத் தொடரிலிருந்து இலங்கை அணியின் அனுபவ வேகப் பந்து வீச்சாளர் துஷ்மந்த சாமீர விலகியுள்ளார்.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் உள்பட 6 அணிகள் பங்கேற்கும் இருபது - 20 ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி ஐக்கிய அரபு எமிரேட்ஸில் வருகிற 27ஆம் திகதி தொடங்குகிறது.

இதில் இலங்கை அணி தனது முதல் போட்டியில் வரும் 27ஆம் திகதி ஆப்கானிஸ்தானை எதிர் கொள்கிறது. இந்த தொடருக்கான இலங்கை அணி சனிக்கிழமை அறிவிக்கப்பட்டது.

இதில் அனுபவம் வாய்ந்த வேகப்பந்து வீச்சாளர் துஷ்மந்த சாமீர இடம் பெற்றிருந்தார். இந்நிலையில் பயிற்சியின் போது அவருக்கு இடது காலில் காயம் ஏற்பட்டுள்ளது. இந்த காயம் காரணமாக அவர் ஆசியக் கிண்ணத் தொடரிலிருந்து விலகியுள்ளார். அவருக்குப் பதிலாக நுவான் துஷாரா அணியில் சேர்க்கப்பட்டுள்ளார் என இலங்கை கிரிக்கெட் வாரியம் தெரிவித்துள்ளது.

# சச்சினின் சாதனையை தகர்த்தார் ஷப்மன் கில்!



ஹராரே, ஓக. 24

சிம்பாவே அணிக்கு எதிராக அதிக ஓட்டங்களை எடுத்த இந்திய வீரர் என்ற சாதனையை சச்சின் வசமிருந்து தனதாக்கினார் ஷப்மன் கில்.

சிம்பாவே அணிக்கு எதிரான கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 13 ஓட்டங்களால் இந்தியா வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் தனது முதல் சதத்தை விளாசிய ஷப்மன் கில் 97 பந்துகளில், ஒரு சிக்ஸர், 15 பௌண்ட்ரிகளுடன் 130 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

முன்னதாக, சிம்பாவே அணிக்கு எதிராக 1998 இல் 127 ஓட்டங்களை சச்சின் டெண்டுல்கர் எடுத்திருந்தார். இதுவே அந்த அணிக்கு எதிராக இந்திய வீரர்கள் எடுத்த அதிகூடிய ஓட்டமாக இருந்தது. இப்போது இந்த சாதனையை ஷப்மன் கில் தகர்த்துள்ளார்.

# 17 ஆண்டின் பின் பாகிஸ்தானுக்கு செல்கின்றது இங்கிலாந்து அணி!



கராச்சி, ஓக. 24

இங்கிலாந்து கிரிக்கெட் அணி 17 ஆண்டுகளுக்குப் பிறகு, பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் செய்வதை அந்நாட்டு கிரிக்கெட் சபை உறுதி செய்துள்ளது.

கடந்த 2005ஆம் ஆண்டுக்கு பிறகு பாதுகாப்பு குறைபாடுகளை காரணம் காட்டி இங்கிலாந்து அணி பாகிஸ்தானுக்கு சென்று விளையாட மறுத்தது. இந்த நிலையில், 17 ஆண்டுகளுக்கு பிறகு பாகிஸ்தானுக்கு இங்கிலாந்து அணி சென்று விளையாட உள்ள நிலையில், பாகிஸ்தான் கிரிக்கெட் சபை போட்டி அட்டவணையை வெளியிட்டுள்ளது.

இதன்படி 7 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடர் கராச்சி மற்றும் லாகூர் மைதானங்களில் வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் வரும் டிசெம்பர் மாதம் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# மலையக ரயில் சேவை பாதிப்பு

கொழும்பு, ஓக. 24

சரக்கு ரயில் தடம் புரண்டதில் மலையகத்திற்கான புகையிரத சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக புகையிரத நிலைய கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

கண்டியிலிருந்து நேற்று அதிகாலை 3.30 மணியளவில் பதுளை நோக்கி புறப்பட்டு வந்த சரக்கு ரயில் ரொசல்ல ரயில் நிலையத்தில் காலை 7.50 மணியளவில் தடம் புரண்டது.

குறித்த ரயிலின் ஒரு பெட்டி தடம் புரண்டதாகவும் இதனை மீண்டும் தண்டவாளங்களில் தடம் இருத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாகவும் கொழும்பு மற்றும் பதுளையிலிருந்து செல்லும் பயணிகளை ரொசல்ல பகுதியில் கொழும்புக்கும் பதுளைக்கும் மாற்றியனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் ரயில் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

# அதிக உணவு பணவீக்க நாடுகள் பட்டியலில் இலங்கை 5ஆம் இடம்!

கொழும்பு, ஓக. 24

உலகில் அதிக உணவு பணவீக்கம் கொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை ஐந்தாவது இடத்தில் உள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

லெபனான், சிம்பாப்வே, வெனிசுலா மற்றும் துருக்கி நாடுகளுக்கு அடுத்ததாக இலங்கை உள்ளதாக உலக வங்கி வெளியிட்டுள்ள அண்மைய தரவு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் சமீபத்திய உணவுப் பாதுகாப்பு தொடர்பான மேம்படுத்தப்பட்ட ஆய்வறிக்கையில் உள்நாட்டு உணவுப் பணவீக்கம் உலகெங்கிலும் அதிகமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏறக்குறைய அனைத்து குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளிலும் அதிக பணவீக்கம் தொடர்கிறது.

பணவீக்கத்தால் ஆபிரிக்கா, வட அமெரிக்கா, லத்தீன் அமெரிக்கா, தெற்காசியா, ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியா ஆகியன அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் உலக வங்கியின் ஆய்வறிக்கை கூறுகிறது. (அ)

# ஆசிரியர் நியமனத்துக்கான நேர்முக பரீட்சை ஒத்திவைப்பு

திருமலை, ஓக. 24

திருகோணமலை மாவட்டத்திற்கான அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகவும் பட்டதாரி பயிலுநர்களாகவும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதற்காக நடைபெறவிருந்த நேர்முகப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது.

நேற்றும் இன்றும் நடைபெறவிருந்த இந்த நேர்முகப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டதாக கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர் மூ.கோபாலரத்தினம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)



# பொலிஸ் அதிகாரிக்கு பாராட்டு

அம்பாறை, ஓக. 24

அண்மையில் பதவியேற்று சிறப்பாக மக்கள் சேவைகளை முன்னெடுத்து வருகின்ற கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீரை பாராட்டி நினைவு சின்னம் ஒன்றினை கல்முனை மறுமலர்ச்சி மன்றம் வழங்கியுள்ளது.

இந்த நினைவு சின்னத்தை நேற்று பொறுப்பதிகாரியிடம் கல்முனை மறுமலர்ச்சி மன்ற பொதுச் செயலாளர் மீரா முஹைதீன் பைசல், நிர்வாகக் குழுத் தலைவர் அஹ்மட் புர்க்கான் , நிர்வாக உறுப்பினர்களான காரியப்பர் முஹம்மது றூமி, இளைய தம்பி முஹம்மது சமீர் ஆகியோர் இணைந்து வழங்கினர்.

கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கல்முனை பகுதியில் கொரோனா மற்றும் எரிபொருள் நெருக்கடி காலகட்டத்தில் பொதுமக்களின் நலனில் அக்கறையுடன் பல வேறு செயற்திட்டங்களை முன்னெடுத்து மக்கள் மத்தியில் பாராட்டை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)





# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுள் சமயத் தலைவர்களுக்கு உருவச் சிலை!

யாழ்ப்பாணம், ஓக. 24

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினுள் அமைந்துள்ள ஸ்ரீபார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி சங்காபிஷேகமும், சமயத் தலைவர்களான ஆறுமுக நாவலர், சேர். பொன். இராமநாதன் ஆகியோரின் உருவச் சிலைகள் திறப்பும் நேற்று காலை இடம்பெற்றது.

ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி சங்காபிஷேகம் நேற்று காலை 6.00 மணியளவில் ஆரம்பமாகியது. அதனைத் தொடர்ந்து பரமேஸ்வரன் ஆலய வளாகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள சமயத் தலைவர்களான ஆறுமுக நாவலர், சேர். பொன். இராமநாதன் ஆகியோரின் உருவச் சிலைகள் திறந்து வைக்கப்பட்டன.

ஆறுமுக நாவலரின் உருவச் சிலையை சிவஸ்ரீ கெங்காதரக் குருக்கள் திரைநீக்கம் செய்து, தீபாராதனை காட்டித் திறந்து வைக்க யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா மலர்மாலை அணிவித்து வணக்கம் செய்தார்.

கொடை வள்ளலார் சேர். பொன். இராமநாதனின் உருவச் சிலையை பரமேஸ்வரன் ஆலயப் பிரதம குருக்கள் திரை நீக்கம் செய்து, தீபாராதனை காட்டித் திறந்து வைக்க சேர். பொன். இராமநாதனின் வழித்தோன்றலான என். தியாகராஜா மலர்மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினார்.

தொடர்ந்து பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபையின் அனுசரனையுடன் நடத்தப்படவுள்ள வேதாகமப் பாடசாலை திறந்து வைக்கப்பட்டது. (அ)

# யாழில் அதிக விலைக்கு முட்டை விற்ற மூவருக்கு எதிராக வழக்கு!

யாழ்ப்பாணம், ஓக. 24

யாழ்ப்பாணத்தில் அதிக விலைக்கு முட்டைகளை விற்பனை செய்த மூன்று வர்த்தகர்களுக்கு எதிராக யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினரால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கோழி முட்டைகளுக்கான கட்டுப்பாட்டு விலை வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வெளியிடப்பட்டுள்ளது.

அதில் வெள்ளை நிற முட்டை 43 ரூபாவும், பழுப்பு நிற முட்டை 45 ரூபாவுக்கு விற்பனை செய்ய நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் முட்டைகளின் விலைகளைக் கட்டுப்பாட்டு விலைக்குள் விற்காது அதிக விலைக்கு வர்த்தகர்கள் விற்பனை செய்வதாக கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில், யாழ். மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினர் கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம், திருநெல்வேலி, கல்வியங்காடு போன்ற பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் திடீர்ச் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

அதன்போது, அதிக விலைக்கு கோழி முட்டை விற்பனை செய்த மூன்று வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், எதிர்வரும் காலங்களில் வர்த்தக நிலையங்களில் திடீர்ச் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினர் தெரிவித்தனர். (அ)

சைவம் தழைத்தோங்க

நல்லூர் கந்த சுவாமி கோவில் பெருந்திருவிழாவையொட்டி

ஓம் தொலைக்காட்சி நடத்திய

சைவம் தழைத்தோங்க - 2022 நிறைவு வைபவம்

இடம் : நடராஜா பரமேஸ்வரி மண்டபம் (நல்லூர் ஆலய வடக்கு வீதி)

காலம் : 24.08.2022 புதன் (இன்று) இரவு 7 மணி

- சைவக் களஞ்சியம் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு இடம்பெறும்
- ஓம் தொலைக்காட்சியின் அபிமானிகள் அனைவரையும் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கிறோம்

நிகழ்வு ஏற்பாட்டு குழு.

## வடக்கில்...

மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் குறித்த நிறுவனத்தின் "வட மாகாணத்தில் காணி அபகரிக்கப்பட்டோரின் குரல்" எனும் தொனிப்பொருளில் நேற்று மன்னாரின் விருந்தகம் ஒன்றில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டது.

மேலும், அரசாங்கம், படையினர், வனவள, தொல்பொருள் திணைக்களம் போன்றவைகள் தங்களின் காணிகளை அபகரிப்பு செய்தமை குறித்து பாதிக்கப்பட்டவர்கள் கருத்து வெளியிட்டனர்.

இதன்போது, 1984 முதல் திட்டமிட்ட வகையில் அரசாங்கம் கிராமங்களிலிருந்து வெளியேற்றி காணிகளை அபகரித்ததாக முல்லைத்தீவை சேர்ந்த வயோதிப தாயார் தெரிவித்தார்.

மேலும், சிங்கள மக்கள் அங்கு குடியேற்றப்பட்டுள்ளனர் என்றும் தங்களின் விளைநிலங்கள் இன்றும்கூட விடுவிக்கப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சிங்கள அரசாங்கம் பாரபட்சமாக நடந்து கொள்கிறது. ஒரே குடையின் கீழ் ஒரே நாட்டில் ஓர் ஆட்சியின் கீழ் ஒரு தாய் மக்கள் போல் வாழ்வதாக ராஜபக்ஷ அரசாங்கம் கூறி வந்த நிலையில், தமிழர்களின் காணிகளை அபகரித்து சிங்கள மக்களுக்கு வழங்கி தமிழர்களான எங்களை ஓரங்கட்டியே நடக்கிறார்கள். இந்த புறக்கணிப்பு எங்களுக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனாலேயே சிங்கள மக்கள், சிங்கள அரசாங்கம் என்றே கூறுகிறோம். அவர்கள் மீது வெறுப்பே ஏற்படுகிறது. இந்த நிலைமை மாற வேண்டும் என்றும் மேலும் கூறினார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் தமது காணியை இழந்தவர்கள், அரசின் காணி சுவீகரிப்பால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பொது அமைப்புகள் என 80இற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இதில், இந்த மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு மற்றும் ஆலோசனைகளை வழங்கும் வகையில் சட்டத்தரணிகளான செல்வராசா டினேசன் மற்றும் திருமதி சிவலிங்கம் புராதனி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மன்னார் உப அலுவலக அதிகாரியும் பங்கேற்றிருந்தனர்.

## மன்னாரில்...

காற்றாலை மின் கோபுர அமைப்புகள் தொடர்பில் அரசியல்வாதிகள், அரச உயர் அதிகாரிகள் மௌனம் காத்து வருகின்றனர். இந்த நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

இதற்காக வரும் திங்கட்கிழமை மாவட்டம் முழுவதும் அனைத்து நடவடிக்கைகளையும் நிறுத்தி விழிப்புணர்வு போராட்டம் ஒன்று நடத்தப்படும். இதற்கு அரசாங்கம் செவிசாய்க்காத பட்சத்தில் தொடர்ச்சியாக எதிர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொறியியலாளர் சங்க பிரதிநிதிகள், மீனவ அமைப்புகள், மதத் தலைவர்கள், மனித உரிமைகள் செயல்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

## இளைஞர்களை...

பதவியில் இருந்து அகற்ற முடிந்தது. எனினும், அந்தப் புரட்சியையும், மக்கள் போராட்டத்தையும் முன்னெடுத்த இளம் தலைமுறையினருக்கு எதிராக அரச அடக்குமுறை ஏவப்படுகின்றது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் ஊடாக அவர்களை அரசு வேட்டையாடுகின்றது."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

"இன்று இளைஞர்களை வேட்டையாடும் யுகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வசந்த முதலிகே உள்ளிட்ட பலருக்கு எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவல் உத்தரவு பிறப்பிக்க ஜனாதிபதியும் அரசாங்கமும் நடவடிக்கை எடுத்துள்ளது.

தமது சொந்த அரசியல் கருத்தை முன்வைக்கும் தவறுக்காக அரசு இளைஞர்களை இப்படி நடத்துகின்றதா எனக் கேள்வி எழும்புகின்றது. அரச பயங்கரவாதத்தில் இருந்து அரசாங்கம் உடனடியாக வெளியேற வேண்டும். அநீதிக்கும், அநியாயத்துக்கும், அடக்குமுறைக்கும் எதிராக முன்நிற்கும் இளைஞர் சமூகத்துடன் ஒன்றிணைந்து, ஐக்கிய மக்கள் சக்தி செயல்படும்" - என்றார்.

நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## கோட்டாபய...

மாத இறுதியில் நாடு திரும்புவார் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இன்னமும் இரு வாரங்களின் பின்னரே அவர் நாடு திரும்புவார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் ரொய்ட்டருக்கு கூறியுள்ளன.

எனினும், முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான பேச்சுகளைப் பொறுத்தே அவர் எப்போது இலங்கை வருவார் என்பது தங்கியுள்ளது. தாய்லாந்தில் தங்கியுள்ளதால் ஏற்பட்ட செலவுகளும் அவர் நாடு திரும்புவதைத் தீர்மானிக்கின்றன. விமானப் பயணம், ஹோட்டல் செலவு எனப் பல கோடி ரூபாய்கள் அவருக்காக செலவிடப்படுகின்றன. இந்த செலவை அவரின் ஆதரவாளர்களை ஏற்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பு தொடர்பில் ஜனாதிபதி, பொதுஜன பெரமுன இடையே பேச்சு இடம்பெற்றது. இதன் காரணமாகவே கோட்டாபயவின் வருகை பிற்போடப்பட்டது.

அவர் நிச்சயமாக நாடு திரும்ப விரும்புகிறார் பாதுகாப்பே முக்கிய விடயம் புலனாய்வு தரப்பினர் அவரின் பயணத்தைத் தாமதிக்குமாறு கேட்டுள்ளனர் என அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அவரது பாதுகாப்பு குறித்த ஏற்பாடுகள் பூர்த்தியானால் கோட்டாபய இரண்டு வாரங்களில் அல்லது அதற்கு முன்னர் நாடு திரும்புவார் என தகவலறிந்த வட்டாரமொன்று தெரிவித்தது. (ஐ)

## காரைக்காலுக்கு...

போக்குவரத்து இந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான செய்திகள் நேற்று வெளியாகியிருந்தன. இந்நிலையில், வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பை நேற்று அமைச்சரவை பேச்சாளருமான பந்துல குணவர்தன நடத்தினார்.

இதன்போது படகு சேவை தொடர்பாக செய்தியாளர்கள் கேள்விகளை எழுப்பினர். இதற்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "போக்குவரத்து அமைச்சராக இருக்கின்றபோதிலும் இந்த கப்பல் போக்குவரத்து தொடர்பில் எனக்கு தகவல்கள் தெரியாது." என்று அமைச்சர் பந்துல குணவர்தன பதிலளித்தார்.

## இடைக்கால...

சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், எனினும், பாராளுமன்ற நிகழ்ச்சி நிரல் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என குறிப்பிட்டார். (அ)

# புலம்பெயர்ந்தோர் உதவியைப் பெற முன் நம்பகத்தன்மையை வெளிப்படுத்துங்கள்

## அரசாங்கத்தை கேட்கிறார் சுரேஷ்

யாழ்ப்பாணம், ஓக. 24

புலம்பெயர் உறவுகள்மீதான தடையை ஓர் அரசு விலக்குவதும் மற்றோர் அரசு மீண்டும் தடை விதிப்பதும் வழக்கமான ஒன்றாகி விட்டது. தமிழ்த் தேசிய இனத்தை ஒடுக்கும் நோக்கில் தேசிய இனப்பிரச்னையை உருவாக்கிவிட்ட தென்னிலங்கை அரசியல்வாதிகளாலேயே ஏராளமான தமிழர்கள் புலம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே, புலம்பெயர் உறவுகளின் உதவிகளை இலங்கை அரசு பெற விரும்பினால் தேசிய இனப்பிரச்னைக்கான நிரந்தரத் தீர்வை முன்வைப்பதுடன் தனது நம்பகத்தன்மையையும் வெளிப்படுத்த வேண்டும்."

- இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணயின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

மேலும், "கடந்த சில நாட்களுக்கு முன்பாக குறிக்கப்பட்ட சில புலம்பெயர் அமைப்புக்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தடையையும், அதேபோல் புலம்பெயர் தனிநபர்கள் சிலரின் மீதான தடையையும் நீக்கியுள்ளதாக அரசு வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளது. தமிழ்த் தேசியப் பரப்பில் அரசியல் பணியாற்றும் சில கட்சிகளும் அமைப்புகளும் இதனை வரவேற்றுள்ள அதேவேளை, பலர் இந்த அறிவித்தல் தொடர்பில் அரசின் நம்பகத்தன்மை குறித்து கேள்வி எழுப்புகின்றனர்.

இலங்கை இரண்டு முக்கிய பிரச்னைகளுக்கு முகங்கொடுக்கின்றது. ஒன்று பொருளாதார ரீதியாக வங்குரோத்து நிலையில் இருக்கின்றது. அந்த வங்குரோத்து நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு சர்வதேச நிதி நிறுவனங்களின் ஒத்துழைப்பு தேவையாக இருக்கின்றது. அவ்வாறான நிதிநிறுவனங்களைத் திருப்திப்படுத்துவதும் அதேசமயம் ஜெனிவா மனித உரிமைகள் ஆணையகம் போன்றவற்றைத் திருப்திப்படுத்துவதும் இலங்கைக்கு முக்கியத் தேவைகளாக இருக்கின்றது. ஆகவே, புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடை நீக்கம் என்பது அரசு தன்னைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு எடுக்கப்படும் ஒரு நடவடிக்கையாகவே தோற்றம் அளிக்கின்றது.

இந்த நாட்டிலிருந்து இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் புலம்பெயர்வதற்குக் காரணமாக இருந்தது அரச பயங்கரவாதமே. தமிழ் மக்களுக்கு எதிராகப் பாவிக்கப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம் இதுவரை நீக்கப்படவில்லை. அரசு தனக்குத் தேவையான நேரங்களில் சில தற்காலிக ஏற்பாடுகளினூடாக புலம்பெயர் தமிழர்களின் ஒத்துழைப்பைப் பெற முயற்சித்து வருகின்றது. இந்த விடயங்களை ஈழத் தமிழ் மக்களும் புலம்பெயர் தமிழர்களும் சரியாகப் புரிந்துள்ளனர் என்பதை அரசு நினைவில் கொள்ளவேண்டும்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று கோருகின்ற அரசு மேற்கண்ட விடயங்களைக் கவனத்தில்கொள்ள வேண்டும். ஆனால், சாண் ஏற முழம் சறுக்குவதைப் போல் வெளி உலகத்துக்கு ஒரு பேச்சும், உள்ளார்ந்த ரீதியாக அதற்கு எதிரான போக்கையும் கடைப்பிடிப்பதையே எம்மால் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது.

அரசின் மீது நம்பகத்தன்மை ஏற்படுவது போன்ற எத்தகைய செயற்பாடுகளையும் காணமுடியவில்லை. தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு இந்நாட்டின் சமபங்காளிகளான தமிழ்த் தேசிய இனத்தையும் இணைத்துக்கொண்டு நாட்டை முன்னேற்ற வேண்டும் என்ற சிந்தனை இருப்பதாகத் தெரியவில்லை - என்று அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## 12 பொருட்களின்...

குறைக்கப்பட்டு 180 ரூபாவுக்கும், பொன்னி சம்பா அரசியின் விலை 31 ரூபாவால் குறைக்கப்பட்டு 194 ரூபாவாகவும் இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு 40 ரூபா குறைக்கப்பட்டு 280 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## வல்வெட்டித்துறை...

அதன்போது தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் இராமச்சந்திரன் சுரேனுக்கு ஆதரவாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் இருவர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஒருவர், சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த நால்வர், தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் ஒருவர் என 8 பேர் வாக்களித்தனர்.

இவருடன் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ரெலோ உறுப்பினர் க.சதீஸுக்கு ஆதரவாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் 6 பேரும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர்கள் இருவருமாக 8 பேர் வாக்களித்தனர்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர் சபைக்குச் சமூகமளிக்கவில்லை.

அந்நிலையில், நகர சபைக்கான தலைவர் பதவிக்குப் போட்டியிட்ட இருவரும் தலா 8 வாக்குகளைப் பெற்று சமநிலையாக இருந்தமையால் குலுக்கல் முறையில் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் இரா. சுரேன் புதிய தலைவராகத் தெரிவாகினார். (அ)

## பயங்கரவாத...

போராட்டங்களுக்கு எதிராகவும் பயங்கரவாத தடுப்பு சட்டம் பயன்படுத்தப்பட்டது. அண்மையில் கைதான அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட மூவர் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அரசாங்கத்தின் இந்த செயலுக்கு ஐ. நா. மனித உரிமைகள் அமைப்புகள், ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, கனடா உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனத்தையும் கவலையையும் வெளியிட்டுள்ளன. இந்நிலையிலேயே புதிய சட்டம் குறித்து அரசு கவனம் செலுத்தி வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 300 வகை...

கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் நேற்று செவ்வாய்க்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடை உத்தரவு தற்காலிகமானது என்றும், போதிய அந்நிய செலாவணி கையிருப்பபை கையாளும் விதத்திலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தடை செய்யப்பட்ட பொருட்களில், இறக்குமதியாகும் சுவையூட்டப்பட்ட பால், யோர்கட் மற்றும் அதுசார் பொருட்கள், சொக்லேட் மற்றும் அதுசார்ந்தவை, பழங்கள், கச்சான் வகைகள், அற்ககோல் கலக்காத பியர் வகை, அதிகூடிய அற்ககோல் சேர்ந்த மதுபான வகைகள்,

மாபிள் மற்றும் அது சார் பொருட்கள், கழிவறை, குளியலறை உபகரணங்கள் (செரமிக் பொருட்கள்), அழகு சாதனப் பொருட்கள், ரியூப், குழாய்கள், இறக்குமதியாகும் பலகை உள்ளிட்ட மரம்சார் பொருட்கள், கழிவறை பேப்பர் - நாப்கின் உள்ளிட்ட பொருட்கள்,

பெண்களுக்கான மேலாடைகள், ஜீன்ஸ், காற்சட்டை, உள்ளாடைகள், ஆண்களுக்கான சேர்ட், ரீசேர்ட், உள்ளாடைகள் உள்ளிட்ட மேலும் தெரிவு செய்யப்பட்ட ஆடை வகைகள். காலணி வகைகள், இறக்குமதியாகும் பொய் தலைமுடி வகைகள், வீட்டு தளபாட வகைகள், கரண்டி வகைள் மற்றும் மேசை உபகரணங்கள் உள்ளிட்ட சமையலறை பொருட்கள், பூட்டு வகைகள் என்பன அடங்குகின்றன. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# நாணய நிதியத்தின் கடன் வசதி இவ்வருட இறுதியில் கிடைக்கும்

## மத்திய வங்கி ஆளுநர் நம்பிக்கை

கொழும்பு, ஓக. 24

சர்வதேச நாணய நிதியத்தில் இருந்து இலங்கை பெற எதிர்பார்க் கப்படும் கடன் வசதி இந்த வருட இறுதிக்குள் கிடைக்கும் என எதிர் பார்க்கப்படுவதாக மத்திய வங்கி யின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-உண்மையில் நாம் சர்வதேச நாயண நிதியத்துடன் கலந்துரை



யாடி வருகிறோம். அதன் முதல் படி, அடுத்த மூன்று முதல் நான்கு ஆண்டு களுக்கு ஒட்டுமொத்த பொருளாதா ரக் கொள்கை கட்டமைப்பில் பணி யாளர் அளவிலான ஒப்பந்தத்தை எட்டுவதாகும். அதற்கு நாங்கள் மிக நெருக்கமாக இருக்கிறோம் என்று கூறலாம். உள்நாட்டு கடன் இலக்குகளை அடைவதில் எந்த சிக்கலையும் நாங்கள் காணவில்லை. இதனால் உள்நாட்டு கடனை மறுசீரமைக்கா மல் நிலைமையை நிர்வகிக்க முடியும்-என்றார். (அ)

# காரைக்கால்-காங்கேசன் இடையே கப்பல் சேவை இவ்வாண்டு ஆரம்பம்

சென்னை, ஓக. 24

இந்தியா-இலங்கை இடையிலான உத்தேச படகு சேவை இந்த ஆண்டு தொடங்கப்படும் என புதுச்சேரி முதல்வர் என்.ரங்கசாமி தெரிவித்துள்ளார்.

காரைக்கால் துறைமுகத்துக்கும் காங்கேசன்துறை துறைமுகத்துக்கும் இடையே படகு சேவையை இந்த ஆண்டு தொடங்க முடியும் என இந்திய அரசு நம்புவ தாக புதுச்சேரி சட்டப்பேரவையில் அவர் தெரிவித்தார்.

புதுச்சேரி 2022-23 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்த ரங்கசாமி, சாகர்மாலா திட்டத்தின் கீழ், இந்த ஆண்டு சென்னை துறைமுக அறக்கட்டளையுடன் இணைந்து புதுச்சேரி துறைமுகத் தில் வணிக சரக்கு கையாளும் பணியை தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

புதுச்சேரி துறைமுகத்தில் பயணிகள் மற்றும் சரக்குக் கப்பலை இயக்குவதற்கும், பிற தொடர்புடைய நடவ டிக்கைகளை மேம்படுத்துவதற்கும் நிறுவனங்களிடம் கேள்வி மனு கோர முன்மொழியப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# புனர்வாழ்வு செயலக சட்டமூலத்தை சமர்ப்பிக்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஓக. 24

புனர்வாழ்வு செயலக சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப் பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

போதைப்பொருளுக்கு அடிமை யானவர்கள், யுத்தத்தில் ஈடுபட்ட போராளிகள், வன்முறைமிக்க தீவிரவாதக் குழுக்களின் அங்கத்த வர்கள் மற்றும் வேறு ஏற்புடைய நபர்களுக்கான சிகிச்சையளித்தல், புனர்வாழ்வளித்தல், பின்னரான பாதுகாப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய கருமங்களை ஆற்றுவதற்காக புனர்வாழ்வு செய லகமொன்றை நிறுவுவதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற் காக 2021.04.19 அன்று இடம் பெற்ற அமைச்சரவையில் அங் கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத் திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்ட மூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாரா ளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப் பிப்பதற்காகவும் நீதி, சிறைச்சாலை கள் விவகாரங்கள் மற்றும் அரசி யலமைப்பு மறுசீரமைப்பு அமைச் சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங் கியுள்ளது. (அ)

# வட்டுவாகலில் காணி சுவீகரிப்பு மக்கள் எதிர்ப்பால் இடைநிறுத்தம்

முல்லைத்தீவு, ஓக. 24

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைபற்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வட்டுவாகல் பகுதியில் கடற்படையினருக்காக காணி சுவீகரிக்கும் முயற்சி மக் கள் எதிர்ப்பினால் இடைநிறுத்தப்பட்டது.

காணி உரிமையாளர்கள் சிலர் காணிகளைக் கடற் படையினருக்கு வழங்குவதற்கு ஒப்புதல் தெரிவித்துள்ள தாக குறிப்பிட்டு நில அளவைத் திணைக்களத்தினர் நேற்று காணி அளவீடு செய்யும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இதன்போது அங்கு திரண்ட மக்களும் அரசியல் பிரமுகர்களும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அதேவேளை, அயல் காணியில் உள்ளவர்கள் எல் லைகளை அடையாளப்படுத்திக் காட்டுவதற்கு உடன் பட மறுத்தனர். இதனால் காணி சுவீகரிப்பு முயற்சி இடைநிறுத்தப்பட்டது. (அ)

# நட்டத்தில் இயங்கும் நிறுவனங்கள் உடனடியாக மறுசீரமைக்கப்படும்!

கொழும்பு, ஓக. 24

நட்டத்தில் இயங்கும் நிறுவனங் கள், சட்ட சபைகள் போன்றவற்றை மறுசீரமைக்கவேண்டும் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற அமைச்ச ரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அதற்கிணங்க, நட்டத்தில் இயங் கும் நிறுவனங்களை மூடாவிட் டாலோ அல்லது வேறு தீர்வுகளை காண நடவடிக்கை மேற்கொள்ளா விட்டாலோ, நாட்டை முன்னோக் கிக் கொண்டு செல்ல முடியாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

தற்போதைய கடுமையான பொரு ளாதார நெருக்கடியிலிருந்து மீள்வ தற்கு அரசாங்கத்தின் வருமானம் நிச் சயமாக அதிகரிக்கப்படவேண்டும் என்றும் அமைச்சர் கூறினார். (அ)

# யாழ். பல்கலை விஞ்ஞான பீடத்தில் 2 மாணவர்களுக்கு வகுப்புத் தடை!

யாழ்ப்பாணம், ஓக. 24

யாழ். பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானபீடத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்களுக்குப் பகிடிவதைக் குற்றச்சாட்டுக் காரணமாக மறு அறிவித்தல் வரையில் வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானபீடத்தைச் சேர்ந்த முதலாம் ஆண்டு மாண வன் ஒருவரைப் பல்கலைக்கழக வாயிலில் வைத்துக் கடந்த 2ஆம் திகதி இவர்கள் தாக்கினர் என்று தெரிவிக் கப்படுகின்றது.

இதன் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசார ணைகளின் அடிப்படையிலேயே குறித்த இருவருக்கும் மறு அறிவித்தல் வரையில் வகுப்புத் தடை விதிக்கப்பட் டுள்ளது. அவர்கள் பல்கலைக்கழகத்தினுள் நுழைவதற் கும், விடுதிக்குள் நுழைவதற்கும் தடை விதிக்கப்பட் டுள்ளது. (அ)

# மாணவி அணிந்திருந்த காலணிக்குள் பாம்புக்குட்டி!

கொழும்பு, ஓக. 24

கொழும்பு ஆனந்த வித்தியாலயத் தில் கல்வி கற்கும் 13 வயது மாணவி ஒருவர் அணிந்திருந்த சப்பாத்துக் குள்ளிருந்து சிறிய பாம்புக்குட்டி மீட்கப்பட்ட சம்பவம் இடம்பெற் றுள்ளது.

நேற்று காலை இடம்பெற்ற இந்த சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

வீட்டிலிருந்து புறப்பட்ட மாணவி, பாடசாலை பேருந்தில் ஏறிய பின்னர், சப்பாத்துக்குள் ஏதோ நெளிவதை உணர்ந்துள்ளார். எனி னும், பேருந்துக்குள் சப்பாத்தை கழற்ற முடியாததால், பாடசாலை செல்லும் வரை சமாளித்துக் கொண்டுள்ளார். பாடசாலைக்கு வந்ததும் தனது சப்பாத்தை கழற்றி னார். உள்ளே சிறிய பாம்புக் குட்டி இருந்தது.

உடனடியாக பாடசாலை நிர்வா கத்தினர், மாணவியை கொழும்பு லேடி றிட்ஜ்வே சிறுவர் மருத்து வமனையில் சேர்ப்பித்தனர்.

மாணவியின் உடலில் விஷம் கலக்கவில்லையென்றும், மாணவி நலமாக இருக்கிறார் என்றும் லேடி றிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனை யின் பணிப்பாளர் மருத்துவர் ஜே. விஜேசூரிய தெரிவித்தார்.

கடவட பிரதேசத்தைச் சேர்ந்த மாணவியே இந்த விபரீத அனுப வத்தை எதிர்கொண்டார்.

இவ்விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த மருத்துவமனையின் பணிப்பாளர், காலணிகளை அணிவதற்கு முன்னர் அதனை உள்பக்கமாக பரிசோதிக்க பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு பழக்கப்படுத்த வேண்டும் - என்றார்.

# அத்தியாவசிய சேவைகளுக்கான எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 24

தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திரம் தொடர்பான ஆய்வு கூட்டம் நேற்று காலை இணையவழியாக நடை பெற்றது.

அதில் எரிபொருள் விநியோகம் தொடர்பான சில புதிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், அத்தியாவசிய சேவைகளுக்காக விசேட பிரிவுகளின் கீழ் மேலதிக எரிபொருள் ஒதுக்கம் அறி முகப்படுத்தப்படுவுள்ளதாக எரிசக்தி அமைச்சர் காஞ் சன விஜேசேகர தெரிவித்தார். (அ)

# கடற்படை சிப்பாய் உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், ஓக. 24

காங்கேசன்துறை கடற்படை முகாமில் கடமையாற் றும் கடற்படைச் சிப்பாய் ஒருவர் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டு உயிரை மாய்த்துள்ளார்.

கேகாலையை சேர்ந்த டி.பி.என்.டி. பெரேரா (வயது-23) எனும் கடற்படை சிப்பாயே உயிரிழந் துள்ளார்.

குறித்த சிப்பாய் நேற்றுக் காலை தனது துப்பாக்கியி னால் தன்னைத் தானே சுட்டுக்கொண்டு தனது உயிரை மாய்த்துக்கொண்டார்.

சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸ ாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# ஜனாதிபதி செயலக பணிப்பாளராக கீர்த்தி தென்னக்கோன் நியமனம்!

கொழும்பு, ஓக. 24

தென் மற்றும் மத்திய மாகாணங்களின் முன்னாள் ஆளுநரான ரஞ்ஜித் கீர்த்தி தென்னக்கோன், ஜனாதிபதி அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகமாக (சமூக விவகாரங்கள்) நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் சிவில் அமைப்புகள், மனித உரிமைகள், தேர் தல் கண்காணிப்பு உள்ளிட்ட பல துறைகளில் பணியாற் றிய தொழில் வல்லுநர் என்பது குறிப்பிடத்தக்கது.

சமூக விவகாரங்கள், பொருளாதார மறுமலர்ச்சி என்பன தொடர்பில் உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியில் இவருக்கு அனுபவம் உள்ளது. கீர்த்தி தென்னக்கோன் வெகுஜன தொடர்பு முதுகலைப் பட்டதாரியாவார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.08.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.